REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 17 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :160 சித்திரை 20 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 03 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## தேர்தல் பணிகளை ஆரம்பிக்க முடிவு

### நீதிமன்றம் தடை விதிக்காவிடின் ஜூன் 20 தேர்தல் ஆணைக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 3
நீதிமன்றம் ஊடாகத் தடையுத்தரவு ஏதாவது பிறப்பிக்கப்பட்டால் மாத்திரமே, ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடைபெறாது. தடையுத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படாவிட்டால், ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடைபெறும். அதற்குரிய வகையில் தேர்தல் பணிகளை முன்னெடுக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று மாலை தீர்மானித்துள்ளது. 02

## குணமடைந்த நோயாளிக்கு மீண்டும் கொரோனா!

கொழும்பு, மே 3
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியிருந்த ஜாஎல பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவநிபுணர் அனில் ஜாசிங்க உறுதிப்படுத்தி 02

## 'கொரோனா' தொற்று 702

கொழும்பு, மே 3
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 12 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்து தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 690 இலிருந்து 702 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
இதேவேளை, தொற்றுக்குள் 02

## கொரோனாவால் லண்டனில் மேலுமொரு உயிரிழப்பு

லண்டன்,மே 3
கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக லண்டன் வற்பேட்டில் வசித்து வந்த, ஈழத்தமிழர் லோகசிங்கம் பிரதாபன் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.
கடந்த மாதம் 3 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். 02

## 9 வீடுகள் தீக்கிரை

ஹற்றன், மே 3
ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எபோட்ஸிலி தோட்டத்தில் 14 வீடுகளைக் கொண்ட நெடுங்குடியிருப்பில் நேற்றிரவு 7 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின. மேலும் 5 வீடுகளுக்கு பகுதியளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.
இந்தத் தீ விபத்தால் 50 க்கும் மேற்பட்டவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர். அவர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உரிய இடமொன்றில் தங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தோட்டத்தில் கோவி 02




## உதயன் பணியாளர் படுகொலை: 14ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 3
ஈழத்தின் மாபெரும் ஊடகப் படுகொலை நிகழ்ந்த மே 2ஆம் நாளான நேற்று, ஈழத்துப் பத்திரிகை சுதந்திர நாள் உதயன் பணிமனையில் நேற்று மாலை கடைப்பிடிக்கப்பட்டது.
ஊடக சுதந்திரத்துக்காக தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்களின் மனமுருகி நினைந்து ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.
நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாககுறைந்தளவானோரின் பங்கேற்புடன் உதயன் பணிமனையில் மிக எளிமையாக நினைவுகூரல் இடம்பெற்றது. (ஓ,5)

## பெரும் சிக்கலில் வேட்பு மனுக்கள்!

கொழும்பு, மே 3
ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் சட்டரீதியான வலு தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது.
இதன் காரணமாக ஜூன் 20 ஆம் திகதி பெரும்பாலும் தேர்தல் நடக்காது என்று தெரிவிக்கப்படுகின்றது.
தேர்தல்கள் ஆணைக்குழுவினருக்கும், அரசியல் கட்சிகளின் செயலர்களுக்கும் இடையில் தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுக்காலை கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.
இப்போது நாடாளுமன்றத் தேர்தல் நடத்த வேண்டாம் என்று நேற்றைய கூட்டத்தில் கலந்து 02

## சடலத்தை எரியூட்ட இளைஞர்கள் எதிர்ப்பு



முல்லைத்தீவு,மே.3
கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் உயிரிழந்தவரின் சடலத்தை மாவடிப்புலவு மயானத்தில் எரியூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட போது இளைஞர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதையடுத்து எரியூட்டும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை வளா 02

## கொரோனா நெருக்கடி ஊடகங்களுக்கும் சவால்

### சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 3
அவசரகால நிலைமையிலும் நாட்டில் நிலவும் சர்வாதிகாரப் போக்கால் ஊடகத் துறை பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது என்று சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது..
சர்வதேச ஊடக சுதந்திர தினம் இன்றாகும். அதனை மு 02

## கொழும்பு பறந்தனர் தமிழ்க் கூட்டமைப்பு முன்னாள் எம்பிக்கள்

கொழும்பு, மே 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பு சென்றுள்ளனர்.
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அழைப்பில் நாளை காலை 10 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறும் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் 02

*குணமடைந்த...*

னார். நெஞ்சு வலியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நோயாளிக்கு மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது என ஜாஎல பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.ஏ. அனுர அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் அனைவரையும் அச்சமடையச் செய்துள்ளது.

67 வயதான நோயாளி கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி முதன் முதலில் கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் ஏப்ரல் 17ஆம் திகதி முழுமையாகக் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியிருந்தார்.

இதன் பின்னர் கடந்த 30ஆம் திகதி மீண்டும் நெஞ்சு வலி ஏற்பட்டபோது அவர் வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்தார். அதனைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் கொரோனா வைரஸ் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நோயாளி தற்போது கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ஓ,5,22)

*தேர்தல்...*

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் கட்சிச் செயலாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு கலந்து கொண்ட கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டன. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மாத்திரம் எதிர்க்கவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, ஆணைக்குழு உறுப்பினர்களான அபயசேகர, பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தேர்தல் தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவது என்றும், அதற்குரிய வகையில் தேர்தல் பணிகளை ஆரம்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் நாளை வழங்கப்பட இருந்தது. இருப்பினும் அதனை நாளை வழங்க முடியாமல் இருப்பதாக காலையில் இடம்பெற்ற கூட்டத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்திருந்தார்.

ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்றால் அதற்கு 35 நாள்கள் முன்னதாக அதாவது மே 15 ஆம் திகதியளவில் விருப்பு இலக்கங்களை வழங்கினால் போதும் என்று நேற்று மாலை இடம்பெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுவிடுமுறை தினத்தில் வேட்பு மனுக்களை ஏற்றுக் கொண்டமை உள்ளிட்ட அரசமைப்பு மீறல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஏதாவது தரப்புக்கள் நீதிமன்றத்தை நாடினால், நீதிமன்றம் கட்டளையாக்கினால் மாத்திரமே தேர்தல் ஒத்தி வைக்கப்படும் எனவும் இல்லாவிடின் ஜூன் 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவது எனவும் நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஓ,5,105)

*கொரோனாவால்....*

இவர் நீண்ட கால தமிழ் தேசிய செயல்பாட்டாளரும், தமிழ் பற்றாளரும் ஆவார். இவர் பல நற்பணிகளையும் ஆற்றியுள்ளார். லண்டனில் பிரித்தானிய விளையாட்டுக் கழகத்திலும் முக்கிய உறுப்பினராக செயல்பட்டு வந்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை லண்டனில் சில வாரங்களுக்கு முன்னர் ஆனந்த நடேசன் என்ற ஈழத்தமிழர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தார். (க)

*பெரும் சிக்கலில்....*

கொண்ட கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மற்றும் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான கட்சி ஆகிய மாத்திரமே தேர்தல் பிற்போடப்படுவதை எதிர்த்தன. திகதி அறிவிக்கப்படாமல் தேர்தல் ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று ஏனைய கட்சிகள் வலியுறுத்தின. நாளை 4ஆம் திகதி வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் வழங்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும் தற்போது அது வழங்கப்படாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் அறிவித்தார்.

**வேட்பு மனு விவகாரம்**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை மார்ச் மாதம் 12ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை தாக்கல் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கொரோனாத் தாக்கம் காரணமாக மார்ச் மாதம் 16ஆம் திகதி விடுமுறை என்று அரசு அறிவித்திருந்தது. அன்றைய தினம் வேட்புமனுத் தாக்கல் இடம்பெறாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவும் அறிவித்திருந்தது. மார்ச் 17ஆம், 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்றது. இந்தத் திகதிகளிலேயே நாடு முழுவதும் முக்கிய அரசியல் கட்சிகள் எல்லாம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. ஆனால் இந்த மூன்று திகதிகளும் விசேட பொதுவிடுமுறையாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் மார்ச் 17ஆம் திகதியிடப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தற்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் தெரியவந்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

விடுமுறை அறிவிக்கப்பட்ட நாள்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களின் வலுத் தொடர்பில் சட்டரீதியான சிக்கல் எழுந்துள்ளது. இந்த மூன்று நாள்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீண்டும் தாக்கல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும், இதன் காரணமாக ஜூலை 20ஆம் திகதி தேர்தல் நடத்தப்படாது என்றும் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஓ,5,105)

*கொரோனா..*

ளாகியவர்களில் மேலும் 10 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியவர்களின் மொத்த எண்ணிக்கை 162 இலிருந்து 172 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 30 மணித்தியாலங்களில் 15 பேர் குணமடைந்துள்ளனர். கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையிலிருந்து 07 பேரும், வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையிலிருந்து 07 பேரும், இரணவில வைத்தியசாலையிலிருந்து ஒருவரும் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 702 பேரில் தற்போது 523 நோயாளிகள் 07 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்கள் கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலை, கொழும்பு கிழக்கு முல்லேரியா ஆதார வைத்தியசாலை, காத்தான்குடி ஆதார வைத்தியசாலை, பொலன்னறுவை வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலை, ஹோமாகம ஆதார வைத்தியசாலை, சிலாபம் இரணவில வைத்தியசாலை மற்றும் வெலிசறை கடற்படை முகாமில் அமைந்துள்ள வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மேலும் 179 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ22)

*கொழும்பு...*

கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பது என்று உத்தியோகபூர்வமாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பு சென்றுள்ளனர்.

கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று ஒன்றுகூடும் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை மஹிந்தவின் கூட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் எப்படியான வேண்டுகோள்களைச் சமர்ப்பிப்பது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கவுள்ளனர். அதன் பின்னர் மஹிந்தவின் கூட்டத்தில் பங்கேற்பதற்கான காரணம் குறித்து கூட்டமைப்பின் தலைமை அறிக்கை ஒன்றையும் இன்று வெளியிடவுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக எட்டாவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அனைத்து உறுப்பினர்களையும் நாளை காலை 10 மணிக்கு அலரி மாளிகைக்கு வருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார். எனினும், எதிர்க்கட்சிகளில் சஜித் பிரேமதாஸ தலைமையிலானான் ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. ஆகியன மஹிந்தவின் அழைப்பை நிராகரித்துள்ளன. ஆனால், எதிர்க்கட்சிகளில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன நாளைய கூட்டத்தில் பங்கேற்கவுள்ளன. (எ22))

*9 வீடுகள்...*

லுக்கு அருகிலுள்ள நெருங்குடியிருப்பிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. ஊரடங்கால் மக்கள் வீட்டுக்குள் முடங்கியுள்ள நிலையில், திடீர் தீபரவல் ஏற்பட்டதால் பதறியடித்துக்கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடிச் சென்றனர்.

அதையடுத்து பொலிஸாருக்கும், தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த ஹற்றன், டிக்கோயா நகரசபையின் தீயணைப்பு பிரிவினர், மக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர்.

தீ விபத்தால் உயிர்சேதம் எதுவும் ஏற்படாத போதிலும், பெருமளவில் பொருள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. (க44)

*கொரோனா....*

ன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

நாட்டில் நிலவுகின்ற நோய்ப் பரவல் நிலைமையினுள் ஊடகங்கள் மீதுள்ள சமூகப் பொறுப்பு குறித்து, அனைத்து அதிகாரிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

கொவிட் 19 தொற்று நோய் நிலை தீவிரமடையும் அவதானம் மற்றும் பக்கச் சார்பற்ற சமூகப் பொறுப்புடன் கூடிய ஊடகப் பயன்பாட்டின் அவசியம் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது.

அரச ஜனநாயக கட்டமைப்புகள் மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்கும் நடவடிக்கைகளுக்கு மாறாக, சர்வாதிகார நடவடிக்கைகள் மூலம் இந்த அவசர கால நிலைமைக்கு அதிகமான அரசாங்கங்கள் பதிலளிக்க முற்படுகின்றதைக் காணக்கூடியதாக உள்ளது.

உலகின் ஏனைய நாடுகளில் காணக்கூடியதைப் போன்றே இலங்கையிலும் தீவிர நோய்த் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதில், சுகாதாரத் துறையின் வகிபாகம் தொடக்கம் பொதுமக்கள் நலனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு விடயங்கள் வரை மிகப் பரந்த உரையாடலொன்று தொடர்கின்றது.

இதுபோன்ற உரையாடல்களுக்கு நன்மை தரும் ஜனநாயக சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்குப் பதிலாக அரசாங்கம் மேற்கொள்ளும் சில தீர்மானங்கள் அதுபோன்ற உரையாடல்களை தைரியமிழக்கச் செய்கிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அவ்வாறான தீர்மானங்களுக்கு எதிராக பதில் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமும் இங்கு நினைவுகூறத்தக்கது. அரசாங்கம் உட்பட அனைத்து பொறுப்பு வாய்ந்த அரச துறையினரையும் விமர்சிப்பதற்கும், கேள்வி கேட்பதற்கும் ஊடகங்களுக்கு உரிமையுண்டு.

நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையில் அவ்வாறானதொரு ஊடகப் பயன்பாடு மிகப் பொருத்தமான அரச கொள்கையொன்றை உருவாக்கிக் கொள்ள காரணமாக அமையும். பொது மக்களுக்குச் சார்பாக செயற்படும் சமூக ஊடக பயனாளிகளின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும்.

அதற்கேற்ப இந்த நாட்டில் ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும், சமூக ஊடகப் பயனாளிகளும் பயம் மற்றும் பக்கச் சார்பின்றி செயற்பட்டு, தீவிர நோய்ப் பரவலில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பணியில் பங்களிப்பு மேற்கொள்வதற்கும், விமர்சனம் மற்றும் ஊடக அறிக்கையிடல் காரணமாக கைது செய்யப்பட்டுள்ள சமூக ஊடக செயற்பாட்டாளர்களை விடுதலை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றுள்ளது. (க)

*சடலத்தை...*

கத்துக்குள் சூழ்ந்து கொண்ட குமாரபுரம் இளைஞர்கள் சடலத்தைத் தமது கிராமத்தில் எரிக்க வேண்டாம், வேறு இடத்தில் எரியுங்கள் என்று கோரிக்கை விடுத்தனர்.

கண்காணிப்பு நிலையத்தில் கண்காணிக்கப்பட்டுவந்த கொழும்பு குணசிங்கபுரத்தைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். இவர்களில் 80 அகவையுடைய வேலு சின்னத்தம்பி என்பருக்குக் கொரோனா தொற்று இல்லை என பரிசோதனையில் கண்டறியப்பட்டது. தொடர்ந்து இருவரின் உடலங்களும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டன.

வேலு சின்னத்தம்பி என்பவரின் சடலத்துக்குப் பொறுப்பு எடுக்க எவரும் இல்லாத காரணத்தால் மருத்துவமனை நிர்வாகம் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

நபரின் உயிரிழப்பு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முள்ளியவளைப் பொலிஸாரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. சடலத்தை கொரோனாத் தொற்று நடைமுறைக்கு அமைவாக மருத்துவமனை நிர்வாகமே அடக்கம் செய்ய வேண்டும் என்பதற்கு இணங்க, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரின் அனுமதியுடன், குமாரபுரம் பகுதி கிராம சேவகர் ஊடாக மாவடிப்புலவு மயானத்தில் சடலத்தை எரியூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதையறிந்து, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை வளாகத்துக்குள் சூழ்ந்து கொண்ட குமாரபுரம் இளைஞர்கள் சடலத்தை தமது கிராமத்தில் எரிக்கவேண்டாம் என்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வவுனியாவில் உள்ள மின்சார எரிசுடலையில் சடலத்தை எரியூட்டுவதற்குக் கொண்டு செல்வதற்கு நிதிச் சிக்கல் காணப்படுவதாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இளைஞர்களிடம் தெரிவித்துள்ளார். அதற்கான செலவை இளைஞர்கள் சேர்த்துக் கொடுப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, முள்ளியவளை பொலிஸார் சடலத்தை வவுனியா கொண்டு சென்று மின்சார எரியூட்டலில் எரிப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

அதேவேளை, பாதுகாப்பு முகக் கவசம் இன்றி அதிகளவானவர்கள் மாவட்ட மருத்துவமனையில் ஊரடங்குச் சட்டம் வேளையிலும் ஒன்று கூடியிருந்த போதும் பொலிஸார் கண்டுகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (க19)

# சலூன்களை திறக்க அனுமதி தாருங்கள்

## மன்னார் சி. தொ.கூ. சங்கத்தினர் கோரிக்கை

**மன்னார், மே 3**
**மன்னார் மாவட்டத்திலுள்ள சிகையலங்கரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்க அனுமதிக்கக் கோரி, மன்னார் பிரதேச சிகையலங்கார தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரால் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸிடம் கோரிக்கைக் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது.**

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:
மன்னார் பிரதேச சிகை அலங்கார தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் ஆகிய நாம் எமது பணிவான வேண்டுகோளினை தங்களின் மேலான கவனத்திற்கு முன்வைக்கின்றோம்.
நாட்டில் ஏற்பட்டுள்ள 'கொரோனா' நோய் தொடர்பான சுகாதார செயற்பாடுகளுக்கு நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் எமது முழுமையான ஆதரவினையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேற்படி தொற்று நோய் பரவலை தடுப்பதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் செயற்பாடுகளில் ஒன்றான 'சிகை அலங்கரிப்பு நிலையங்களை' மூடுகின்ற செயற்பாட்டால் எமது சங்கத்தின் அங்கத்தவர்களை நம்பி வாழ்கின்ற குடும்பத்தினரும் பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.
நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான ஊரங்குச் சட்டத்தின் காரணமாக மிகவும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளோம்.
அரசின் தற்போதைய அறிவிப்பால் மிகவும் இக்கட்டான சூழ் நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலையில் கடந்த 22 ஆம் திகதியன்று மன்னார் மாவட்ட சுகாதார பணிமனையில் எமது சங்க உறுப்பினர்களுக்கு என இரண்டு பிரிவாக இடம் பெற்ற விசேட கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி, மன்னார் நகர சபை செயலாளர், மன்னார் நகர சபை உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் , பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
கலந்துரையாடலின் போது 'மல்டி மீடியா' மூலமான செய்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது. சிகை அலங்கரிப்பு நிலையம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான கையேடு வழங்கப்பட்டது.
நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான பொலிஸ் ஊரடங்குச் சட்டம் காரணமாக சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் சிறுவர்கள் , முதியவர்கள், அலுவலகப் பணியாளர்கள் என பல்வேறு நிலையில் உள்ளோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டும் எமது மாவட்ட மக்களின் இந்த நிலையை நிவர்த்தி செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் தொடர்ந்தும் தங்களது அறிவித்தலின் படி இயங்க ஆவணம் செய்யுமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ப-56)

# கைக்குண்டு மீட்பு

கொழும்பு, மே 3
புத்தளம் சேகுவந்தீவு பகுதியில் தனியாருக்கு சொந்தமான உப்பு வாய்க்காலில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
உப்பு வாய்க்காலின் உரிமையாளர் புத்தளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், புத்தளம் நீதிமன்றத்தின் உத்தரவின்படி புத்தளம் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருக்கு தகவலை வழங்கியுள்ளனர். அதையடுத்து பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் கைக்குண்டை மீட்டு பாதுகாப்பான முறையில் வெடிக்கச்செய்துள்ளனர்.
82 ரக கைக்குண்டு ஒன்றே மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ஏ)

# அதிக விலைக்கு உரம் விற்றால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே 3
அதிக விலைக்கு உர விற்பனை செய்பவர்கள் மற்றும் மறைத்து வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய உரச் செயலகம் தெரிவித்துள்ளது.
சிறுபோக விவசாயச் செய்கை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தந்த மாவட்டங்கள் ஊடாக விவசாயிகளுக்கு உர வகைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் உரச் செயலகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. (க)

# ஊரடங்கால் வீணாகும் மரமுந்திரிகை செய்கை

## சந்தை வாய்ப்பை ஏற்படுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, மே 3
தொடர் ஊரடங்கு காரணமாக மர முந்திரிகை செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். செய்கை பண்ணப்பட்ட மரமுந்திரிகைகள் விற்பனை செய்யமுடியாது வீணாகிப்போகின்றன. இதற்கு சம்மந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் மர முந்திரிகைச் செய்கையில் பல குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன.
தற்போது போடப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக அந்தச் செய்கையாளர்கள் மேலும் தெரிவித்ததாவது:
நாம் கடந்த முறை நல்ல விளைச்சலைப் பெற்றுக்கொண்டோம். இந்த முறை இலைகளை வெட்டிய பின்னர் வருகின்ற குருத்தானது சுறுண்ட வடிவில் வருகின்றது. இதனால் அங்கு உற்பத்தி ஆகின்ற பூக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. போதிய உரம் இன்மையா அல்லது நோய்தாக்கமா என அறியமுடியவில்லை இது தொடர்பாக உரியவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் வருவதாகத் தெரிவித்துள்ளனர்.
பழங்கள் விற்பனை செய்வதற்கான போதிய சந்தை வசதி இல்லை.
நாங்கள் தற்போது பழங்களை அறுவடை செய்யக்கூடிய நிலையில் உள்ளோம். ஆனால் தொடர்ச்சியான ஊடரங்கு காரணமாக சந்தை வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன. விற்பனையாளர்கள் எங்களிடம் ஊரடங்கைக் காரணம் காட்டி மிகக் குறைந்த விலைக்கு கேட்கின்றனர். அந்த விலைக்கு பழங்களை வழங்க முடியாத நிலையில் உள்ளோம். செய்கையாளர்கள் ஒவ்வொருவரும் உற்பத்தி செய்த தலா சுமார் 150 கிலோ பழங்கள் விற்ப்பனை செய்ய முடியாத நிலையில் வீணாகியுள்ளன. இவை தொடர்பாக கவனம் எடுத்து சரியான சந்தை வாய்ப்புக்களை எமக்குப் பெற்றுத்தர வேண்டும்- என்றார். (ப-6)

# ஊரடங்கு அனுமதிப்பத்திரத்தை வைத்து குடு கடத்தியவர் கைது

புத்தளம், மே 3
ஊரடங்குச் சட்டத்தில் பயணிப்பதற்கான அனுமதிபத்திரத்தை வைத்துக் கொண்டு, குடு விற்பனையில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டில் ஒருவரை பாலாவி விமானப்படை முகாமின் விமானப்படையினர் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.
ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் நுரைச்சோலையிலிருந்து கொழும்பு, தம்புள்ளைக்கு மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டுள்ள அவர், அதனை வைத்து குடு விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று தெரியவருகிறது.
விமானப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, புத்தளம் மதுரன்குளிய கரக்கட்டிய 16 ஆம் மைல்கல் பகுதியில் வைத்து குறித்த நபர் பயணித்த வாகனத்தை மறித்து சோதனையிட்ட விமானப் படையினர் குடுவுடன் குறித்த நபரை கைதுசெய்துள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட நபர் முந்தலம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-114)

# தவறைத் திருத்திக்கொண்டு கொரோனாவை ஒழிப்போம்

## கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, மே 3
குறைகள் மற்றும் தவறுகளை கருத்தில் கொண்டு கொரோனா ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகொள்ள வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். கொரோனா ஒழிப்புச் செயலணியுடன் நடத்திய கலந்துரையாடலியே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அரசு வைரஸை ஒழிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் உலகின் அனைத்து நாடுகளைப் பார்க்கிலும் முன்னிற்பதாக தொற்றுநோய் தொடர்பில் உலகின் முன்னணி வைத்திய நிபுணர்களில் ஒருவரான ஹொங்கொங்கில் உள்ள பேராசிரி



யர் மலிக் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார் என்று வைத்தியர்கள் இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டனர்.
அதற்கு பங்களித்த சுகாதார, பாதுகாப்பு துறை உள்ளிட்ட ஏனைய அனைவரையும் பாராட்டிய ஜனாதிபதி அவர்கள் இந்த நிலைமையை தொடர்ந்தும் பாதுகாத்து பேண வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.
வைரஸை ஒழிப்பதில் மக்கள் குழுக்களாக வாழும் பிரதேசங்கள் மற்றும் விசேட பிரிவினர் தொடர்பில் பொது முறைமையில் இருந்து விலகி திட்டமிடுவதன் அவசியத்தையும் ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார்.
சந்தையில் விற்பனைக்குள்ள கிருமித் தொற்றகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களின் நியமங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறும் வைத்தியர்கள் கேட்டுக்கொண்டனர். நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையினர் பயன்படுத்தும் விசேட ஆடைத் தொகுதியின் நியமங்கள் குறித்தும் ஆராயுமாறு ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டார். (ஏ)



## வீடுகளில் இருந்தவாறே வெசாக்கை கொண்டாடுக

*சுகாதார அமைச்சு அறிவிப்பு*

கொழும்பு, மே 3

நாட்டில் கொவிட் 19 வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் இம்முறை வெசாக் உற்சவ வழிபாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சு தொடர்ந்து மக்களுக்கு அறிவுறுத்தல்களை வெளியிட்டு வருகின்றது.

அதன்படி, விகாரைகளுக்குச் சென்று வழிபடும் போது தனிமனித இடைவெளிகளைக் கடைப்பிடிப்பது கடினம் என்பதால் இயன்றளவு வீடுகளிலேயே வழிபாட்டு நிகழ்வுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்து சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (ப)

# தனிமைப்படுத்தலில் இறந்தோரின் சடலங்களால் எழுந்தது பிரச்சினை

**முல்லைத்தீவு, மே 3**

**முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் அமைந்துள்ள தனிமைப் படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இருந்து இரு வயோதிபர்கள் உயிரிழந்த நிலையில் அவர்களின் சடலங்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவருக்கு கொரோனா என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்களைப் பொறுப் பெடுப்பது யார் என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.**

கொழும்பு, பேருவளை பகுதியில் யாசகம் எடுத்து வந்த பலர் கடந்த மாதம் நடுப்பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப் பிவைக்கப்பட்டுள்ளார்கள் இவ்வாறானவர்கள் 60 பேர் வரை கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக் கப்பட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் இவர்களில் இருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர். நெஞ்சுவலி ஏற்பட்டுள்ள நிலையில் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது அவர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது. கொழும்பைச் சேர்ந்த 80 வயதுடைய வேலு சின்னத்தம்பி, அதே இடத்தைச் சேர்ந்த 81 வயது ஐடய பி.ஜி.மார்டீன் என்பவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்களது சடலங்கள் மாவட்ட மருத்துவமனையில் பிரத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இருவரின் மாதிரிகள் கொரோனா வைரஸ் (பி.சி.ஆர்) பரிசோதனைக் காக எடுக்கப்பட்டுள்ள போதும் வேலு சின்னத்தம்பி என்பவருக்குக் கொரோனா தொற்று இல்லை என முடிவுகள் கிடைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இருவரும் கொழும்பில் யாசகம் பெற்று வந்தவர்கள் என்றும் இருவரின் சடலங்களை யார் பொறுப்பெடுப்பது இறுதி சடங்குகள் யார் செய்வது என்ற சிக்கல் நிலை தற்போது தோன்றியுள்ளது. முள்ளியவளை பொலிஸார் உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (பு-19)

## மங்கள சமரவீர மீது மஹிந்தானந்த சாடல்

கொழும்பு, மே 3

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, அரச அதிகாரிகளையும் நாட்டையும் தவறாக வழி நடத்தியுள்ளார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றஞ் சாட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை அரசியல் அமைப்பு ஊடாக தீர்ப்பதற்கும், அரச செலவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்கவும் நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட வேண்டும் என கோரி மங்கள சமரவீர, ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தற்போது அரசாங்க பணியாளர்களுக்கான வேதனம் வழங்குவது உள்ளிட்ட அத்தியாவசிய செலவுகளுக்கு சட்ட ரீதியாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் அங்கீகாரம் வழங்குவதற்கு நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தல் விடுத்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்ததாவது அரசமைப்பில் ஜனாதிபதியின் நிதி அதிகாரங்கள் தொடர்பில் தெளிவாக விளக்களிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான தெளிவான விளக்கம் வழங்கப்பட்டுள்ள நிலையில், மங்கள சமரவீர போன்றோர் நாட்டையும், அரச அதிகாரிகளையும் தவறாக வழி நடத்த முயல் கின்றனர். அவர் போன்றோர் கைது செய்யப்பட வேண்டும்- என்றார். (க)

## கற்பாறைக்கு வைத்த வெடி உயிரைப் பறித்தது

கொழும்பு, மே 3

பொலனறுவையில் கற்களை உடைப்பதற்காக வைக்கப் பட்ட வெடியில் அகப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலனறுவை, கலஹகல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கல் அகழும் இடத்தில் கருங்கற்களை உடைப்பதற்காக அந்த நபர் கல் வெடி வைத்துக் கொண்டிருந்துள்ளார். அது வெடித்ததில் அகப்பட்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த 60 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக பொலனறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)

## மரக்கறி மற்றும் கடலுணவை நிலத்தில் வைத்து விற்பதற்கு தடை

*சுகாதாரப் பிரிவு அறிவிப்பு*

சாவகச்சேரி, மே 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதியோரங்களில் மரக்கறி மற்றும் கடலுணவுகள் விற்பனை செய்வோர் அவற்றை நிலத்தில் வைக்காமல் உயரமான பெட்டிகளில் வைத்து விற்பனை செய்யுமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித் துள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள சந்தைகள் கடந்த மார்ச் 24ஆம் திகதி மூடப்பட்டதால், வட்டாரங்களில் உள்ளூராட்சி சபைகளால் அறிவிக்கப் பட்ட இடங்களில் செயற்பட்டு வருகின் றன. கொட்டகைளிலும், கொட்டகை இல்லாத இடங்களிலும் மரக்கறி மற்றும் கடலுணவுகள் போன்றவற்றை நிலங்களில் விரிப்புகளை விரித்து விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடிந்தது.

தற்காலிகச் சந்தை இயங்கும் இடங்கள் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதால், அவற்றை வாங்கும் மக்களுக்குத் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்புக் காணப்படுகிறது.

கொட்டகையின்றிக் காணப்படும் இடங்களில் மரக்கறி மற்றும் கடலுணவுகள் போன்றவை தொடர்ச்சியாக வெய்யிலில் காணப்படுவதால் பழுதடையும் நிலையும் காணப்படுகிறது.

சந்தைகள் மீண்டும் இயங்கும் வரை வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் மரக்கறிகள் மற்றும் கடலுணவுகளைப் பெற்று வெயில் படாதவாறு வைக்கப்படுவதுடன், அவற்றை நிலத்தில் வைக்காமல் உயரமான பெட்டிகளில் வைத்து விற்குமாறும், அதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்கள் தொடர்ந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் சுகாதாரப்பிரிவினர் அறிவித்துள்ளனர். (க-9)



## மணல் அனுமதிக்கு விசேட நடைமுறை

கொழும்பு, மே 3

மணல், மண் மற்றும் சரளைகளை ஏற்றிச் செல்வதற்கான அனுமதி வழங்கல் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் எளிமைப்படுத்தப்பட்ட நடைமுறையுடன் மேற்கொள்ளப்படும் என்று புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதியன்று வெளியான சுற்றறிக்கையின் கீழ், இதற்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பதாரிகள் தனிமனித இடைவெளியைப் பேணுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் பணியகத்துக்கு வாடிக்கையாளர்களின் வருகையை மட்டுப்படுத்தவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணியகத்தின் கனிம உரிமைகள் பணிப்பாளர் அல்லது தொடர்புடைய பிராந்திய அகழ்வாராய்ச்சிப் பொறியாளரைத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (க)

## மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கிண்ணியா, மே 3

கிண்ணியா கண்டல் காடு கிராமத்தில், மாடு மேய்த்துக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

கிண்ணியா காக்காமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான முகம்மது பாருக் என்பவரே உயிரிழந்துள்ளார். சடலம் கிண்ணியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# பெரும்துயர் துடைக்கும் கொடையாளர்கள்




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வடமராட்சி செவிப்புலன் அற்றோர் நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-23)




கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொன்னகர் மத்தி, பொன்னகர் வடக்கு மற்றும் 72 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. கனடா வாழ் தாயக மக்களின் நிதிப்பங்களிப்பில் இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



பிரான்ஸ் நாட்டில் வாழும் குருஸ் மனோகரன் என்பவரால் அனுப்பிவைக்கப்பட்ட நிதியில் இருந்து யாழ் குடாநாட்டில் வாழும் நாரந்தனையைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)




கொரோனாவால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையைத் தவிர்க்கும் வகையில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் அந்த அமைப்பின் மூன்றாம் கட்ட உதவியாக சங்கரத்தையில் வசிக்கும் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)




கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள மக்களுக்கு வன்னிப் பிராந்திய சைவக்குருமார் ஒன்றியத்தின் நிதியுதவியில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கொடிகாமம் மத்தி பெரியநாவலடிப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட வீட்டிலுள்ள ஒரு குடும்பத்தினருக்கு நலன்விரும்பி ஒருவரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-159)




மிருசுவில் புனித நீக்கொலர் கழகத்தால் 125 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ம-159)



# கொவிட் கிளர்ச்சிக்கு எதிரான போரில் படையினருக்கு அதிகம் பாதிப்பு ஏற்பட்ட வாரம்

நிலாந்தன்

வைரஸ் தொற்று அதிகமாகி தனிமைப்படுத்தல் முகாம்களை இலங்கை அரசாங்கம் திறந்த பொழுது முதலில் கிழக்கில் திறக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையம் ஹிஸ்புல்லாவின் சர்ச்சைக்குரிய பல்கலைக்கழக வளாகத்தில் திறக்கப்பட்டது. அந்தப் பல்கலைக்கழக வளாகம் கடந்த ஓராண்டுக்கு மேலாக படையினரின் கட்டுப்பாட்டுக்குள்தான் இருந்து வருகிறது. ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின் அது ஒரு படைவளாகமாகத்தான் காணப்படுகிறது. ஒரு பல்கலைக்கழக வளாகத்தை அரசாங்கம் தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றியது என்பது முஸ்லிம்களுக்கு எதிரான மற்றொரு நகர்வு என்று பார்க்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து பல தனிமைப்படுத்தல் முகாம்கள் வடக்கு - கிழக்கில் திறக்கப்பட்டன. இது தொடர்பில் தமிழகத்திலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன் சஞ்சிகையின் நிருபர் ஒருவர் மார்ச் மாதம் பிற்கூறில் என்னைத் தொடர்புகொண்டு கேட்டார். தனிமைப்படுத்தல் முகாம்கள் வடக்கு- கிழக்கு பகுதிகளிலேயே அதிகம் உருவாக்கப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு வருகிறதே? என்று. அவருக்கு நான் சொன்னேன்...... (அப்போதைய தகவல்களின்படி) இதுவரை 16 தனிமைப்படுத்தல் மையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஆறு மட்டுமே வடக்கு- கிழக்கில் உண்டு. எனவே வடக்கு- கிழக்கில் மட்டும்தான் தனிமைப்படுத்தல் முகாம்கள் உருவாக்கப்படுகின்றன என்று கூறப்படுவது சரியான ஒரு புள்ளிவிவரம் அல்ல என்று.



அது மட்டும் அல்ல அடையாளம் காணப்படும் நோயாளிகள் தென்னிலங்கையில் உள்ள மருத்துவமனைகளுக்குத்தான் அனுப்பப்படுகிறார்கள். அதாவது மருத்துவர்களின் வார்த்தைகளில் சொன்னால் சிகிச்சை அளிக்கும் பரப்பு (treatment area) தெற்கில்தான் உண்டு. எனவே நோயாளிகள் சிங்கள மக்கள் மத்தியில்தான் வைத்துப் பராமரிக்கப்படுகிறார்கள். எனவே தர்க்கத்தின்படி சிங்கள மக்களுக்குத்தான் தொற்று ஆபத்து அதிகம். அத்தோடு தனிமைப்படுத்தல் முகாம்களைப் படையினரே பராமரிக்கிறார்கள். இதனால் படையினருக்கே அதிகரித்த அளவில் நோய்த்தொற்று வாய்ப்பு உண்டு. எனவே இந்த விடயத்தை இன ரீதியாக பார்க்கும் போது அதிகம் நிதானம் தேவை..

1974இல் ஜேவிபியின் முதலாவது கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட ஜேவிபி தலைவர்கள் வடக்குக்கே கொண்டு வரப்பட்டார்கள். யாழ்ப்பாண கோட்டையிலும் கிளிநொச்சி- அக்கராயன் பள்ளிக்கூடத்திலும் தான் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டார்கள். அதற்கு காரணம் வடக்கானது தெற்கிலிருந்து தொலைவாக இருக்கிறதென்று அரசாங்கம் நம்பியதுதான். இவ்வாறு தொலைவாக இருக்கும் ஒரு பிரதேசம் என்று அவர்கள் வடக்கை கருதுவதாலும் தனிமைப்படுத்தல் முகாம்களை வடக்கில் அமைக்கக் கூடும். ஆனாலும் புள்ளிவிவரங்களின் படி வடக்கில் மட்டுமல்ல நாடு முழுவதிலும் தனிமைப்படுத்தல் முகாம்கள் உண்டு. எனவே இதனை எடுத்த எடுப்பில் இன ரீதியாகப் பார்க்கத்தேவையில்லை என்றும் நான் ஆனந்தவிகடன் நிருபருக்குச் சொன்னேன்.

இவ்வாறானதொரு பின்னணியில் அண்மை நாட்களில் வடக்கில் புதிதாகத் தனிமைப்படுத்தல் முகாம்கள் உருவாக்கப்படுவது தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. குறிப்பாக படைத்தரப்பின் மத்தியில் நோய்த் தொற்று தொடங்கியதை அடுத்து தனிமைப்படுத்தல் முகாம்களை அரசாங்கம் அதிகம் வடக்கிலேயே உருவாக்க முனைகிறது என்று குற்றம் சாட்டப்படுகிறது. இலங்கைத் தீவில் ஒப்பீட்டளவில் அதிக தொகை படையினர் வடக்கு-கிழக்கிலேயே நிலை கொண்டிருப்பதனால் தனிமைப்படுத்தல் முகாம்களையும் அவர்கள் வடக்கு- கிழக்கில் உருவாக்க முயற்சிக்கக் கூடும். இது இலங்கை தீவின் படைக் கட்டமைப்பின் பெரும் பகுதி தமிழ்ப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டும் ஓர் உதாரணமாகும். இன்னும் ஆழமாக சொன்னால் தமிழ் பகுதிகள் எந்த அளவுக்கு படைக்கப்பட்டுள்ளன என்பதை இது காட்டும்.

அதேசமயம் வடக்கு- கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் முக்கிய பொதுக்கட்டிடங்களையும் பாடசாலைகளையும் அரசாங்கம் தனிமைப்படுத்தல் முகாம்களாக மாற்ற இருப்பதாக செய்திகள் வெளிவந்தன. படையினர் மத்தியில் தொற்று ஏற்பட்டதும் அரசாங்கம் அதிகம் உசாரடைந்ததன் விளைவே அது. எனவே இது விடயத்தில் தமிழ்ப் பகுதிகளைக் குறிவைத்துத் தனிமைப்படுத்தல் முகாம்கள் உருவாக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்ட முன் இது தொடர்பான புள்ளிவிவரங்களை ஆழமாக ஆராயவேண்டும்.

வைரசுக்கு எதிரான யுத்தத்திலும் அரசாங்கம் சிங்கள- பௌத்த தேசியவாத கண்கொண்டே நிலைமைகளை அணுகுகிறது என்பதற்கு ஆகப் பிந்தியவேறு உதாரணம் உண்டு. பசில் ராஜபக் ஷவின் தலைமையில் உருவாக்கப்பட்ட செயலணியில் ஒரு முஸ்லிமுக்குக் கூட இடம் வழங்கப்படவில்லை. ஒரே ஒரு தமிழர் மட்டும் அதில் உண்டு. மேலும் நோயில் இறந்த முஸ்லிம்களின் மையத்தை அடக்கம் செய்வது தொடர்பிலும் அரசாங்கம் முஸ்லிம்களின் உணர்வுகளை மதித்திருக்கவில்லை.

அத்தோடு உலகத்தின் கவனமும் தமிழர்களின் கவனமும் வைரஸின் மீது குவிந்து இருந்தபோது போர்க்குற்றச்சாட்டுக்கு இலக்காகியவரும் நீதிமன்றத்தால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட வருமாகிய ரட்நாயக்கவை அரசாங்கம் விடுதலை செய்தது. இவ்வாறு ஒருநோய்த் தொற்றுக் காலத்திலும் அரசாங்கம் தனது இனவாதப்போக்கைக் கைவிடவில்லை என்ற குற்றச்சாட்டுக்களின் மத்தியில்தான் இப்பொழுது படைத்தரப்பினருக்கான தனிமைப்படுத்தல் முகாம்களை வடக்கில் அதிகம் நிறுவ முற்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன.

இலங்கைத்தீவின் மிகவும் நிறுவனமயப்பட்ட கட்டுக்கோப்பான மிகவும் அதிகமான ஆளணிகளைக் கொண்ட மிக அதிக வளங்களை அனுபவிக்கின்ற ஒப்பீட்டளவில் நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமடைய மிகப்பெரிய ஒரு கட்டமைப்பு படைக்கட்டமைப்பு ஆகும். எனவே அனர்த்தகாலங்களில் குறிப்பாக வைரசுக்கெதிரான போரில் படைத் தரப்பை களத்தில் இறக்குவது தவிர்க்கமுடியாதது. இலங்கைத்தீவின் சுகாதாரத்துறை அனைத்துலக அளவில் மதிக்கப்படும் வளர்ச்சிகளை பெற்றிருக்கிறது. இவ்வாறான ஒரு சிவில் கட்டமைப்பு இருக்கத்தக்கதாக வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் படைத்தரப்பை ஈடுபடுத்தியது குறித்து பலரும் விமர்சித்தார்கள். ஒரு சிங்கள செயற்பாட்டாளர் டுவிட்டரில் பின்வருமாறு எழுதியிருந்தார். சுகாதாரத்துறையினர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை படைத்தரப்பு செய்தால் அவர்கள் நோயாளியை ஒரு பயங்கரவாதிபோல அணுகுவார்கள் என்று. அரசாங்கம் வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குரிய செயலணியை கொவிட் கிளர்ச்சிக்கு எதிரான செயலணி என்றும் பெயரிடப்பட்டது. எல்லா இலங்கை வாழ் மக்களுக்கும் அனுப்பப்பட்ட ஒரு கைபேசிச் செய்தியில் அவ்வாறுதான் அழைக்கப்பட்டுள்ளது. ஒரு வைரஸ் தொற்றை கிளர்ச்சி என்று பெயரிட்ட ஒரே அரசாங்கம் இது. அத்தோடு, வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பற்றிப் பேசும்போது பிரதமர் மகிந்த உட்பட சில சிங்கள அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெற்றிகொண்டதை ஞாபகப்படுத்தியே பேசிவருகிறார்கள். இலங்கைத் தீவில் வைரஸ் தடுப்புநடவடிக்கைகளில் படைத்தரப்பின் பங்களிப்பை குறித்து அண்மையில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஜனாதிபதி

(மறுபக்கம் பார்க்க)

# கொவிட் கிளர்ச்சிக்கு எதிரான போரில்....

(தொடர்ச்சி)



ராஜபக்சவுக்கு பாராட்டு தெரிவித்திருந்தார். அப்படிப் பட்ட பாராட்டுக்களை எதிர்பார்த்துத்தான் அரசாங்கம் படைத்தரப்பைக் களத்தில் இறக்கியது. தமிழ் மக்களால் போர் குற்றம் சுமத்தப்படும் ஒரு படைத்தரப்பை வைரசுக்கு எதிரான போரில் ஈடுபடுத்தி அதில் அவர்கள் வெற்றி பெறும் பொழுது அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பலவீனமடைந்துவிடும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது. அதாவது படைத் தரப்பை புனிதப்படுத்துவதே அவர்களுடைய நோக்கம். அமெரிக்காவினால் பயணத் தடைவிதிக்கப்பட்ட ஒரு தளபதியை வைரசுக்கு எதிரான போருக்குத் தலைமை தாங்கவிட்டு அவரைப் புனிதப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.

வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் படைத்தரப்பு முன்னணியில் நின்றது. தனிமைப்படுத்தல் முகாம்களை கண்காணிப்பது தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களை கண்காணிப்பது சோதனைச் சாவடிகளில் வாகனங்களைப் பரிசோதிப்பது, தப்பிக்கும் தொற்று நோய் சந்தேகநபர்களை பின்தொடர்வது அதில் படைப் புலனாய்வின் உதவியைப் பெறுவது மக்கள் கூடும் இடங்களில் தனியாள் இடைவெளியை பேணுமாறு மக்களுக்கு அறிவுறுத்துவது கடை முதலாளிகளுக்கு அறிவுறுத்துவது போன்ற பல்வேறு நடவடிக்கைகளிலும் படைத்தரப்பே ஈடுபட்டது. பெரும்பாலான எல்லாத் தனிமைப்படுத்தல் முகாம்களும் படைமுகாமக்களில் இருந்தன. இதனால் படைத்தரப்புக்கு அதிகம் தொற்று ஏற்படும் ஆபத்து இருந்தது. ஆனால் அண்மையில் படைத்தரப்பினர் மத்தியில் தொற்று அதிகரித்துச் செல்வதற்கு தனிமைப்படுத்தல் முகாம்கள் தான் காரணமா என்று கூறுவதற்கு தேவையான புள்ளிவிவரங்கள் இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் கிடைக்கவில்லை.

இந்தவாரத்தின் முற்பகுதியிலிருந்து ஏற்பட்ட இப்புதிய தொற்று அலை காரணமாக இலங்கைத்தீவின் கொவிட்19 புள்ளிவிபரங்களில் திடீர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முதலாவது நோயாளிக்கும் நூறாவது நோயாளிக்கும் இடையே 54 நாள் இடைவெளி இருந்தது. 101ஆவது நோயாளிக்கும் இருநூறாவது நோயாளிக்கும் இடையே 19 நாள் இடைவெளி இருந்தது. 201ஆவது நோயாளிக்கும் 300 ஆவது நோயாளிக்கும் இடையே எட்டுநாள் இடைவெளி. 301 ஆவது நோயாளிக்கும் 400 ஆவது நோயாளிக்கும் இடையே நான்குநாள் இடைவெளி. 401ஆவது நோயாளிக்கும் ஐநூறாவது நோயாளிக்கும் இடையே இரண்டு நாள் இடைவெளி. 501 ஆவது நோயாளிக்கும் அறுநூறாவது நோயாளிக்கும் இடையே இரண்டு நாள் இடைவெளி.

இதன்படி இலங்கைத் தீவின் மொத்த வைரஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அறுநூறைக் கடந்துவிட்டது. இதில் 200க்கும் குறையாதவர்கள் படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. அதாவது மொத்த நோயாளிகளில் மூன்றில் ஒருபகுதி. அதுமட்டுமல்ல இந்த 200க்கும் குறையாத தொகையினரும் இந்த வாரத்தின் முற்பகுதியளவில்தான் கண்டுபிடிக்கப்பட்டார்கள்.

அதிகம் நிறுவனமயப்பட்ட படைத்தரப்பிற்குள் நோய் பரவும் போது அதன் விளைவுகள் விபரீதமாக அமையும். ஏனெனில் படைத்தரப்பு வழமையாகப் பேணிவரும் தனியாள் இடைவெளிக்கும் நோய்த் தொற்றுகாலத்தில் பேணவேண்டிய தனியாள் இடைவெளிக்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு. இதனால் படைமுகாம்களில் படையினர் வழமைபோல நிறுவனமாகத் தங்குவது நோய் தொற்றை ஊக்கவிக்கக்கூடும். இப்படிப்பட்ட நடைமுறைப் பிரச்சினைகள் பலஉண்டு.

ராஜபக்சவின் இரண்டாவது வருகைக்குப்பின் இலங்கைத்தீவின் சிவில் கட்டமைப்புகள் பல படை மயப்படுத்தப்பட்டன. இப்பொழுது கொவிட் 19 படையினர் மத்தியில் பரவத் தொடங்கிவிட்டது. இதனால் படைமயப்பட்ட எல்லாக் கட்டமைப்புக்களும் அந்த தொற்று விரிவடைந்தால் என்ன நடக்கும்? படையினருக்கு தொற்று ஏற்பட்டதால் அது இலங்கைத் தீவின் கொவிட் 19 புள்ளிவிபரங்களில் ஒரு புதிய அலையை தோற்றுவித்திருக்கிறது. ராஜபக்சக்களின் செல்லப் பிள்ளைகளான படையினருக்கு வந்திருக்கும் வைரஸ் தொற்றை விரைவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வராவிட்டால் அது சிலவேளை அவர்கள் திட்டமிட்டிருக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கான நிகழ்ச்சி நிரலைக் குழப்பிவிடுமா?

---

# கொரோனா தடுப்பு வரைவு வெளியீடு

## அரச மருத்துவ அதிகாரிகளின் பல பரிந்துரைகள் நிராகரிப்பு

கொழும்பு, மே 3

கொரோனா தொற்று ஏற்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் கொரோனா தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் பின்பற்ற வேண்டிய பொதுவான நடைமுறைகள், பரிசோதனைகள் தொடர்பான பொறிமுறை வரைவு தொற்று நோயியல் பிரிவால் வெளியிடப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் பொதுவாகப் பின்பற்ற வேண்டிய சரியான நடைமுறைகள் அவசியம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. தற்போது பொதுவான வரைவு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

யார் யாருக்கு பரிசோதனை செய்ய வேண்டும், திடீர் இறப்புகள் வரும் போது பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், கொரோனா அபாய வலயத்தில் இருந்து வருவோருக்கு கட்டாயம் பரிசோதனை செய்ய வேண்டும், தொற்று உள்ள இடத்தில் பணியாற்றும் சுகாதார பணியாளர்களை பரிசோதனை செய்தல், தொற்று இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் இடங்களில் தொடர்ச்சியாக பரிசோதனை செய்தல், கூட்டு சமூகமாக வாழும் நபர்களை பரிசோதனை செய்தல், தொற்று உள்ளவர் என்று அடையாளம் காணப்பட்டவர் நெருங்கி பழகிய குடும்பம் மற்றும் சமூக மட்டத்தில் பரிசோதனை செய்தல் போன்ற விடயங்களையும் உள்ளடக்கி அனைத்து மாகாணங்களுக்கும் பொதுவான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறிமுறை கொரோனா கட்டுப்படுத்தலுக்கு ஆரம்ப கட்டத்துக்கு ஏதுவானதாக அமையும். ஆனாலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்திய முக்கிய பொறிமுறைகள் சில இதில் உள்ளடக்கப்படவில்லை.

கொரோனாச் சந்தேக நபரை பரிசோதனை செய்து அவருக்குத் தொற்று இல்லை என்று முதல் பரிசோதனையில் தெரியவரும்போது அவரை மீண்டும் இரண்டாம் மூன்றாம் பரிசோதனைகளுக்கு எத்தனை நாளின் பின்னர் அழைப்பது என்ற விடயம் இந்தப் பொறிமுறையில் குறிப்பிடப்படவில்லை.

பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் நாள் ஒன்றுக்கு குறிப்பிட அளவான கொரோனா சந்தேக நபர்களையே பரிசோதனை செய்ய முடியும். அதிகளவானோருக்கு பரிசோதனை செய்ய வேண்டிய நிலை தற்போது உள்ளது. இது தவிர வேறு எந்த பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்படவில்லை.

கொரோனா சந்தேக நபரை தனிமைப்படுத்தல் அவரை முதல் பரிசோதனையில் தொற்று இல்லை என்று கண்டறியும் போது உடனே வீட்டுக்கு அனுப்புதல். அதற்கு பின்னர் என்ன செய்ய வேண்டும் போன்ற விடயங்கள் இந்தப் பொறிமுறை வரைவில் உள்ளடக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ,5,7)

---

# மாணவர்களை மீள அழைத்து வரும் நடவடிக்கைகள் வெற்றி

## வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, மே 3

தெற்காசிய நாடுகளில் உள்ள இலங்கை மாணவர்களை நாட்டுக்கு அழைத்து வரும் பணி நிறைவு பெற்றிருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில், இந்தியாவின், கொல்கத்தாவிலிருந்து 125 இலங்கை மாணவர்களை ஏற்றிக் கொண்ட யு.எல். 1188 விமானம் கடந்த 30 ஆம் திகதி மாலை நாட்டை வந்தடைந்தமையுடன், தெற்காசியப் பிராந்தியத்தைத் தளமாகக் கொண்ட 1065 இலங்கை மாணவர்களை நாட்டுக்கு மீள அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் வெற்றிகரமான நிறைவடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக் காரணமாக இலங்கைக்கு மீளத் திரும்புவதற்கான தமது விருப்பத்தை வெளிப்படுத்திய இலங்கை மாணவர்களை மீள அழைத்து வருவதற்காக, ஏப்ரல் 21 ஆம் திகதி முதல், மொத்தமாக ஒன்பது சிறிலங்கன் எயார்லைன்ஸ் சிறப்பு விமானங்கள் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நாடு திரும்பிய அனைவரும் தற்போது கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஓ,5)

---

# குடத்தனைச் சம்பவம் சட்ட உதவிக்கு தயார்

## மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3

குடத்தனையில் பொதுமக்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சட்ட உதவிகளை வழங்குவதற்குத் தயாராக உள்ளதாக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

இது அவர் கருத்து வெளியிடுகையில்,

"குடத்தனையில் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகின்றன. பாரதூரமான குற்றங்களைச் செய்தவர்களைக் கூட தாக்குவதற்கு பொலிஸாருக்கு அனுமதியோ அதிகாரமோ கிடையாது.

இவ்வாறான நிலையில் ஊரடங்கின் போது பொலிஸார் வீடு புகுந்து பெண்கள் மீது தாக்குதல் நடத்தியமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத காட்டுமிராண்டித்தனமான செயல். இந்தச் செயலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தேவையான சட்ட உதவியை வழங்கத் தயாராக உள்ளேன். இதனுடன் தொடர்புடைய பொலிஸார் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார். (ஓ,5,20)

# அங்கேயும் ஒரு 'ஆட்டையைப் போட்ட' அரசியல்வாதி

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதிலும் வேட்பாளர்களுக்கு இன்னும் விருப்பு இலக்கங்கள் வழங்கப்படவில்லை. தேர்தல் நடக்குமா என்பதுகூட சந்தேகம்தான். ஆனால், ஒரு சில அரசியல்வாதிகள் தங்களின் விருப்பு இலக்கம் இப்படித்தான் இருக்கும் என்று ஊகித்துக்கொண்டு சத்தமில்லாமல் பிரசார சத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கொழும்பு, கடுவலை தொகுதியைச் சேர்ந்த அரச தரப்பு வேட்பாளர் ஒருவர் இப்படியான வேலையில் அண்மையில் ஈடுபட்டாராம்.

அகர வரிசையின்படி இப்படித்தான் தனது விருப்பு இலக்கம் அமையும் என்று ஊகித்துக்கொண்டு அந்த இலக்கத்தை கொரோனா நிவாரணப் பொதிகளில் பதிவு செய்து மக்களுக்கு விநியோகம் செய்திருக்கிறார் அவர்.

அரச அதிகாரிகளால் விநியோகிக்கப்பட விருந்த அந்தப் பொருட்களையும் பயனாளிகளின் பெயர் பட்டியலையும் 'ஆட்டையைப் போட்டுக்கொண்டு' அந்தப் பொதிகளில் விருப்பு இலக்கத்தைப் பதிவு செய்துள்ளார். தான் வழங்குவதுபோல் காட்டிக்கொண்டு மக்களுக்கு அவற்றை விநியோகம் செய்துள்ளார். இதனால் அரசில் உள்ள சீனியர்கள் ஆத்திரமடைந்துள்ளனராம். தாங்கள் சும்மா கிடக்க இவர் மட்டும் எப்படிப் பிரசாரம் செய்ய முடியும் என்று கேட்டு குதிக்கிறார்களாம்.

**அட , அங்கேயும் நிவாரணத்தை' ஆட்டையைப் போடும்' அரசியல்வாதிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.**

எம்.ஐ.முபாறக்





## அறிந்தும் அறியாமலும்

# நடுநடுங்கும் அமைச்சர்

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக பலரும் இறங்கி வேலை செய்கிறார்கள். பல அதிகாரிகளும் சில அரசியல்வாதிகளும் அடக்கம்.

அவ்வாறு இறங்கி வேலை செய்பவர்கள் வைரஸின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளமைதான் பரிதாபம். கடற்படையினர் இதற்கு உதாரணம்.

வெலிசறை கடற்படை முகாமில் உள்ள கடற்படையினருக்குத் தொற்று ஏற்பட்டமை கண்டறியப்பட்டதுதான் தாமதம். ஆடிப்போனார் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி.

காரணம் என்ன தெரியுமா?

அந்த கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை அதிகாரி ஒருவர் கலந்துகொண்ட நிகழ்வில் பவித்ராவும் கலந்துகொண்டமைதான். தனக்கும் தொற்று ஏற்பட்டிருக்குமோ என்ற அச்சம் அவரைத் தொற்றிக்கொண்டது. ரொம்பவும் ஆடிப்போன அவர் உடனடியாக சுகாதார அதிகாரிகளைத் தொடர்புகொண்டுவிடயத்தைத் தெரிவித்து தன்னை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டாராம்.

சுகாதார அமைச்சர் அல்லவா. விசேட கவனிப்பு.இறுதியில் தொற்று இல்லை என்று முடிவு வந்ததும்தான் போன உயிர் திரும்பி வந்ததாம். இருந்தாலும், அச்சம் அவரை விட்டு இன்னும் போகவில்லையாம்.

காரணம்...?

கொரோனா தொற்றுக்கு இலக்காகி சுகமடைந்துள்ள வர்களுக்கும் மீண்டும் கொரோனா வந்துள்ளது. முதல் பரிசோதனையில் கொரோனா இல்லை என்று முடிவு வந்தபோதும், பிறகு தொற்று உள்ளமையும் தெரிய வந்துள்ளது. அந்தக் கொரோனா எப்போது அறிகுறியைக் காட்டும் என்று தெரியாத ஒரு நிலை இருப்பதால் பவித்ராவுக்கு கொரோனா அச்சம் இன்னும் நீங்கவில்லையாம்.

இப்போதெல்லாம் சாதாரணமாக இருமல் வந்தாலும்தும்மல் வந்தாலும் பயந்து நடுங்குகிறாராம். கொரோனாவாக இருக்குமோ என்று அஞ்சுகிறாராம்.வைத்தியரைக் கூப்பிட்டு விசாரிக்கிறாராம். இப்படி அவர் பயந்து நடுங்குவதும் சமூக இடைவெளியை அதிகம் அதிகமாகப் பேணுவதும் தொடர் கதையாகிவிட்டது என்கிறார்கள் அவருக்கு அருகில் இருப்பவர்கள்.



# மூக்குடைபட்ட முன்னாள் ஆளுநர்

என்னதான் ஊரடங்கை போட்டு இந்த நாட்டையே அடக்கி வைத்திருந்தாலும் அரசியல்வாதிகள் அதைப் பயன்படுத்தி அரசியல் லாபம் அடையத்தான் செய்கிறார்கள்.

அரச அதிகாரிகளின் வேலைகளில் தலைபோட்டு அதைத் தாங்களே செய்வதாக மக்களுக்கு காட்டிக்கொள்கிறார்கள் சில அரசியல்வாதிகள். தேர்தலைக் குறி வைத்துத் திருட்டுத்தனமாக பிரசாரங்களையும் நடத்துகிறார்கள்.

அப்படித்தான் கிழக்கின் முன்னாள் ஆளுநர் கடந்த சனிக்கிழமை ஊரடங்கு வேளையில் ஏறாவூரில் மக்கள் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார். சத்தமில்லாமல் ஒரு வீட்டில் அந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தச் செய்தி எப்படியோ கசிந்துவிட்டது அவரின் அரசியல் எதிரிகளுக்கு. அவ்வளவுதான்... அந்த இடத்துக்கு வந்து நின்று குழம்பிவிட்டார்கள். சமூக ஊடகங்களில் செய்தியைப் போட்டுக் குழப்பிவிட்டார்கள்.

"கொழும்பில் இருந்து வந்திருக்கிறார்.தன்னைத் தனிமைப்படுத்தாமல் மக்களை சந்திக்கிறார். ஒருவேளை இவரிடம் கொரோனா இருந்தால், அது ஊரெல்லாம் பரவும் அல்லவா" என்றொரு பிட்டைப் போட்டுவிட்டார்கள். அவ்வளவுதான்..அங்கு சென்ற அவரது ஆதரவாளர்கள் சிலரும் நழுவத் தொடங்கினர். முன்னாள் ஆளுநரும் அங்கிருந்து நழுவுவதைத் தவிர வேறு வழியில்லை.விடயம் பொலிஸுக்குச் சென்றால் கேஸ் பெரிசாகிடும் அல்லவா.

நைசாக நழுவிவிட்டார் அங்கிருந்து...மூக்குடைபட்டு...

**எல்லாமே தேர்தல் படுத்தும் பாடு.**



# தலைதூக்கும் குடும்ப ஆட்சி

## கவலையில் சீனியர்கள்!

குடும்ப ஆட்சி என்றாலே நினைவுக்கு வருவது ராஜபக்ஷவின் குடும்பம்தான். 2005 முதல் 2015 வரையான அவர்களது ஆட்சியில் முழுக் குடும்பமுமே அதிகாரத்தைக் கையில் வைத்திருந்தது. ஆட்சி கவிழ்ந்தமைக்கு இதுதான் முக்கிய காரணம். அதை மறந்து மக்கள் மீண்டும் அவர்களை ஆட்சியில் அமர்த்தியுள்ளபோதிலும்,தொட்டில் பழக்கம் சுடுகாடு என்பதுபோல் மீண்டும் அதே குடும்ப ஆட்சி தலைதூக்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கொரோனா அதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மஹிந்த மற்றும் பசில் ஆகியோர் மூன்று சகோதரர்களிடம்தான் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான அதிகாரம் தேங்கிக்கிடக்கிறது. அந்தக் கட்சியில் பவித்ரா உள்ளிட்ட ஒரு சிலரைத் தவிர வேறு யாரையும் காண முடிவதில்லை.

தேர்தலும் நெருங்குவதால் தாங்களும் கொஞ்சம் களத்தில் இறங்கி வேலை செய்தால் நல்லா இருக்கும் என்று சீனியர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அந்த விருப்பத்துக்கோ முற்றுப்புள்ளி. எல்லா வேலைகளுக்கும் படையினர்தான். சீனியர்களுக்கு வேலையே இல்லை.

அந்தக் குடும்பம்தான் மீண்டும் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது என்று வெதும்புகிறார்களாம் அந்த சீனியர்கள். இது போதாதென்று எதிர்க்கட்சியினர் இந்த நெருப்பை அணைய விடாமல் எண்ணெய் ஊற்றி வருகிறார்களாம். எப்படியோ குடும்ப ஆட்சிமீது சீனியர்கள் வெறுப்புக் கொண்டு உடைத்துக்கொண்டு போக வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்களாம் எதிர்க்கட்சியினர்.

# தூதரக பெண்மணியின் கண் நோய்

வல்லரசு நாடு ஒன்றின் இலங்கை தூதுவர் அவர்.அவர் முன்பு ஐரோப்பிய நாடு ஒன்றின் தூதுவர்.

அப்போது அவருக்கு கண்ணில் ஏற்பட்ட வியாதி ஒன்றைக் குணப்படுத்துவதாக சம்பந்தப்பட்ட அமைச்சு சத்தமில்லாமல் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்ததாம்.

அந்த அமைச்சின் அதிகாரி ஒருவர் இதற்கான அனுமதியை வழங்கி இருக்கிறார். அந்த அமைச்சின் உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்துக்கு விடயத்துக்குப் பொறுப்பான அரசியல் தலைவரும் சென்றிருந்தார். அந்தப் பெண்மணிக்கு நிதி வழங்குவதற்கு அனுமதி வழங்கிய அதிகாரியும் அங்கு ஆஜராகி இருந்தார்.

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் இந்த விடயத்தை இழுத்துவிட்டார். அவ்வளவுதான். அந்த நிதி ஏன் வழங்கப்பட்டது? யாரின் உத்தரவின்பேரில் வழங்கப்பட்டது என்ற கதை அனைத்தையும் போட்டு உடைத்துவிட்டாராம் அந்த அம்மணிக்கு நிதி வழங்கிய அதிகாரி. விடயத்துக்குப் பொறுப்பான அந்த அரசியல் தலைவரோ எதுவும் தெரியாதவர்போல் மேலே பார்த்துக்கொண்டு இருந்தாராம்.

**மக்களின் பணம் எதற்கெல்லாம் செலவாகிறது என்று பார்த்தீர்களா...**

# உயிருடன் உள்ளார் கிம் பொதுவெளியில் வந்தார்!

பியாங்யாங், மே 3
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் உயிருடனேயே உள்ளார். வடகொரியாவில் நேற்றுமுன்திம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் பொதுவெளியில் தோன்றினார்.
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் கடந்த 20 நாள்களாக வெளியுலகுக்கு வராமல் இருந்தார். வடகொரியாவின் தந்தை எனப்படும் கிம் இல் சங்கின் பிறந்ததின கொண்டாட்டத்தில்கூட அதிபர் கிம் பங்கேற்கவில்லை. கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற தனது தாத்தாவின் பிறந்த நாள் விழாவில் அவர் கலந்து கொள்ளாதது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியது. கடந்த 2011ஆம் ஆண்டு அதிபராக வந்தபின் முதல் முறையாக இந்த நிகழ்ச்சியை கிம் தவிர்த்தார்.
இந்த சூழலில் சமீபத்தில் அவருக்கு நடந்த இருதய அறுவை சிகிச்சை தோல்வியில் முடிவடைந்தது. இதையடுத்தே கிம்மின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக சி.என்.என் செய்தி வெளியிட்டது. மேலும் அமெரிக்க உளவுத்துறையும் இதைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறதாகவும் செய்திகள் வெளியாகின.
40 வயதுக்குள் இருக்கும் அதிபர் கிம் அதீதமான புகைப்பழக்கம், உடல் பருமன், உடல்சோர்வு உற்சாகமின்மை, அதிக தூக்கம் ஆகியவற்றால் அவதிப்பட்டதால் இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதாக தகவல் வெளியானது.
வடகொரியாவைப் பொறுத்தவரை தீவிரமான கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கும் நாடு. அங்கு ஊடகங்களின் செய்திகூட அரசின் தணிக்கைக்குப் பின்புதான் வெளியாகும். இதனால்தான் அதிபர் கிம் உடல்நிலை குறித்த எந்தத் தகவலும் வெளிஉலகிற்கு தெரியாமல் ரகசியமாகவே வைக்கப்பட்டதால் அவர் உயிருடன் இருக்கிறாரா என்ற சந்தேகம் கூட வலுத்தது. ஏனென்றால் கிம் தாத்தா முதலாம் கிம் இறந்து இரண்டு நாள்களுக்குப் பின்புதான் வெளிஉலகிற்கே விடயம் தெரியவந்தது.
இந்த சூழலில் கடந்த 20 நாட்களாக நீடித்து வந்த மர்மம் அனைத்தையும் உடைத்து நேற்றுமுன்தினம் பொது நிகழ்ச்சியில் அதிபர் கிம் ஜோங் உன் பங்கேற்றார். தலைநகர் பியாங்யாங் அருகே சன்சியான் நகரில் அரசு சார்பில் கட்டப்பட்ட உரம் தயாரிக்கும் தொழிற்சாலையை அதிபர் கிம் ஜோங் உன் நேற்றுமுன்தினம் தொடக்கி வைத்தார். உழைப்பாளர் தினமான நேற்றுமுன்தினம் சன்சியானில் உள்ள பாஸ்பேட் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது. இதற்கான புகைப்படங்களை வடகொரிய அரசின் கொரிய மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஆனால், கடந்த 20 நாட்களாக கிம் எங்கே சென்றார், எங்கிருந்தார் என்பது குறித்த எந்த தகவலும் வெளியிடப்படவில்லை. (ம)



# சீனா மீது கூடுதல் வரிகள்

## அமெரிக்கா அதிரடி முடிவு




வொஷிங்டன், மே 3
சீனா மீது அமெரிக்கா சுமார் 225 லட்சம் கோடி ரூபா அளவுக்கு வரி விதிக்கவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.
கொரோனா வைரஸை சீனா திட்டமிட்டு உருவாக்கியது என்று குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சீனாவுக்கு எதிராகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்றும் ஏற்கனவே தெரிவித்திருந்தார். அத்துடன் சீனப் பொருள்களுக்கும், இறக்குமதிகளுக்கும் அமெரிக்கா கடும் வரிகளை விதிக்க வாய்ப்புள்ளது என்றும் எச்சரித்தார். இந்த நிலையில் இலங்கை மதிப்பில் சுமார் 225 லட்சம் கோடி டொலர்களை அமெரிக்கா வரியாக விதிக்கவுள்ளதாக தற்போது தகவல் வெளிவந்துள்ளது. (ம)

# அசாஞ்சேயின் உயிருக்கு சிறையில் பெரும் ஆபத்து

## மனைவி உருக்கம்

லண்டன், மே 3
லண்டன் சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கும் விக்கி லீக்கின் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சேயின் உயிருக்கு ஆபத்து உள்ளதாக அவரது மனைவி ஸ்டெல்லா மோரிஸ் அறிவித்துள்ளார்.
'என்னுடைய கணவர் ஜூலியன் அசாஞ்சேயின் உயிருக்கு கடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எச்.எம்.பி. பெல்மார்ஷ் சிறையில் அவர் இருக்கிறார். கொரோனா வைரஸ் சிறைக்குள்ளும் பரவியிருக்கிறது, அசாஞ்சேயை இப்போது விடுவிக்க வேண்டும். குழந்தைகள் அவர் இல்லாமல் வளர்வதை நான் விரும்பவில்லை' என்று அசாஞ்சேயின் மனைவி மேலும் தெரிவித்துள்ளார். (ம)





# அமெரிக்காவுக்கு ஆதரவா? விளைவைச் சந்திப்பீர்கள்!

## ஆஸிக்கு சீனா எச்சரிக்கை

பீஜிங், மே 3
அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்பட்டால் கடும் விளைவுகளைச் சந்தீப்பீர்கள் என்று ஆஸ்திரேலியாவுக்கு சீனா எச்சரித்துள்ளது.
சீனாவின் வுகான் ஆய்வகத்தில் இருந்துதான் கொரோனா பரவியது என்று குற்றஞ்சாட்டியுள்ள ஆஸ்திரேலியா, சீனாவிடம் இருந்து இழப்பீட்டை வசூலிக்கும் வழிகளையும் பரிசிலித்து வருகின்றது. இந்த நிலையிலேயே சீனா மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளது.
சீன அரசின் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
சீனா இத்தகைய சிறுமைத்தனமான தந்திரங்களை மேற்கொள்ளாது. இது எங்கள் மரபு கிடையாது. ஆனால் மற்றவர்கள் செய்தால் நாங்கள் திரும்ப பதிலடி கொடுப்போம். சீனாவின் நுகர்வோர்கள் ஆஸ்திரேலியப் பொருட்களை கைவிடுவார்கள். பல்கலைக் கழகங்களும் சிக்கலாகும், சீன மாணவர்களும், சுற்றுலா பயணியரும், ஆஸ்திரேலியா செல்வதைப் புறக்கணிப்பர். ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மாட்டு இறைச்சி மற்றும் வைன் மது வகைகளுக்கு சீனா தடை விதிக்கும் - என்றுள்ளது. (ம)



# 2023ஆம் ஆண்டுவரை விளையாடுவேன்!

*ரெய்லரின் விருப்பம் இது*

வெலிங்டன், மே 3
2023ஆம் ஆண்டு வரையில் நியூசிலாந்து அணிக்காக தொடர்ந்து விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார் நியூசிலாந்து அணியின் அனுபவ வீரரான ரெய்லர்.
இந்த ஆண்டுக்குரிய சிறந்த நியூசிலாந்து வீரராக ரெய்லர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ரெய்லர் மேலும் தெரிவித்ததாவது:
ஏற்றம், இறக்கம் நிறைந்தது என்றாலும் 2019-2020ஆம் ஆண்டு சீசன் எனக்கு வியப்புக்குரியதாகவே அமைந்திருக்கிறது. உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் விளையாடினேன். ஆஸ்திரேலியாவில் 'பொக்சிங் டே' டெஸ்டில் பங்கேற்றது பெருமைமிக்க தருணம். அப்போது அங்கு நியூசிலாந்து ரசிகர்கள் அளித்த ஆதரவை ஒரு போதும் மறக்க முடியாது.
தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்துவது மகிழ்ச்சி அளிக்கிறது. இப்போதைக்கு ஓய்வு பெறும் எண்ணம் இல்லை. 2023ஆம் ஆண்டில் இடம்பெறும் உலகக்கிண்ணத்தை வெல்லவேண்டும் என்பதே இலட்சியம் - என்றார். (ம)



## டெஸ்ட் பட்டியலில்

# முதலாவது இடத்தை இழந்த இந்திய அணி

புதுடெல்லி, மே 3
சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான பட்டியலில் முதலாவது இடத்தை இந்திய அணி இழந்துள்ளது.
சுமார் 4 ஆண்டுகளின் பின்னர் தனது அந்தஸ்தை ஆஸ்திரேலியாவிடம் பறிகொடுத்துள்ளது இந்திய அணி.
சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் கடந்த 4 ஆண்டுகளாக இந்திய அணி முதலிடத்தில் இருந்து வந்தது. எனினும் நேற்று வெளியிடப்பட்ட இந்தப் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.
116 புள்ளிகளுடன் ஆஸ்திரேலிய அணி முதலிடத்தில் உள்ளது.
115 புள்ளிகளுடன் நியூசிலாந்து அணி இரண்டாவது இடத்தில் உள்ளது. 114 புள்ளிகளுடன் இந்திய அணி மூன்றாவது இடத்தில் உள்ளது.
முதல் மூன்று இடங்களிலும் உள்ள அணிகளுக்கு இடையில் வெறும் ஒரு புள்ளி மட்டுமே வித்தியாசம் இருப்பது இது இரண்டாவது தடவையாகும். இதற்கு முன்னர் 2016ஆம் ஆண்டு இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் வெறும் ஒரு புள்ளி இடைவெளியுடன் புள்ளிப்பட்டியலில் இருந்தன. (ம)

# கபில்தேவுடன் பாண்டியாவை ஒப்பிடாதீர்கள்

*ரசாக் பேச்சு*

இஸ்லாமபாத், மே 3
கபில்தேவ் மிகப்பெரிய வீரர். அவருடன் பாண்டியாவை ஒப்பிடாதீர்கள் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான அப்துல் ரசாக்.
கபில்தேவ் பாண்டியா ஒப்பீடு தொடர்பில் ரசாக் மேலும் தெரிவித்ததாவது:
பாண்டியா ஒரு நல்ல வீரர்தான், ஆனால் இன்னும் சிறப்பாக விளையாடினால்தான் சகலதுறை வீரராக முடியும். கடின உழைப்பு மட்டுமே பயனளிக்கும். ஆட்டத்துக்கு போதிய கால அவகாசம் ஒதுக்கவில்லை எனில் அது எம்மிடமிருந்து திசைமாறி நழுவிச் சென்றுவிடும்.
பாண்டியா உடல் மற்றும் மனோரீதியாக தன்னை இன்னும் கொஞ்சம் நல்ல விதத்தில் தயார்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. நிறைய காயங்கள் அடைகிறார். பாண்டியாவின் பிரச்சனை இது.
கபில், இம்ரான் கான் ஆகியோர் எந்தக் காலத்திலும் சிறந்த வீரர்கள். அவர்களுடன் தற்போதைய வீரர்களை ஒப்பிடாதீர்கள் என்றார். (ம)



# கெய்லின் நீக்கத்துக்கும் எனக்கும் தொடர்பில்லை

*சர்வான் பதிலடி*

ட்ரினிடாட், மே 3
கரிபீயன் பிறீமியர் லீக் தொடரில் ஜமைக்கா அணியில் இருந்து கெய்ல் நீக்கப்பட்டமைக்கும் எனக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்துள்ளார் ஜமைக்கா அணியின் பயிற்சியாளரான சர்வான்.
இது தொடர்பில் சர்வான் மேலும் தெரிவித்ததாவது:
2020ஆம் ஆண்டு கரீபியன் பிறீமியர் லீக்கில் ஜமைக்கா அணியில் கிறிஸ் கெய்ல் தேர்வு செய்யப்படாமைக்கு நான் காரணமல்லன். அணித்தேர்வுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. தவறாகக் குற்றம் சாட்டுகிறார் கெய்ல். மேலும் சமுதாயத்தில் நன் மதிப்புள்ளவர்கள் மீதும் சேற்றைவாரி இறைத்துள்ளார் கெய்ல்.
அவரது தாக்குதலின் மையமே நான் தான். நான் ஏன் பதில் கூறுகிறேன் என்றால் கெய்லின் உளறல்கள் ஏதோ பதில் அளிக்கத் தகுதியுடையவை என்பதால் அல்ல.
பொதுவாக அவர் குற்றம்சாட்டும்போது நாம் அதை நேர் செய்ய வேண்டியுள்ளது. அதேபோல் அவரால் சேற்றை வாரி இறைக்கப்பட்ட நபர்களையும் நான் காப்பாற்ற வேண்டியுள்ளது.
என் கிரிக்கெட் வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே நான் கெய்லுடன் விளையாடியிருக்கின்றேன்.
அவர் ஒரு அபாரத் திறமை என்பதில் எனக்கு எப்போதும் மதிப்பு உள்ளது. அவர் எனக்கு நெருக்கமான நண்பரும் கூட.
எனவேதான் இந்தக் குற்றச்சாட்டுகள் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். எனக்கும் அவர் நீக்கத்துக்கும் எந்த வித தொடர்பும் இல்லை - என்றார்.
'ஜமைக்கா அணிக்கு நான் தேர்வு செய்யப்படாததற்கு கெய்ல் பல காரணங்களை அடுக்கியிருக்கிறார். ஆனால் உண்மையென்னவெனில் அணி உரிமையாளர் மற்றும் நிர்வாகமே இந்த முடிவை எடுத்தது.
இதில் சர்வாணுக்கு பங்கு எதுவும் இல்லை. இது வர்த்தக மற்றும் கிரிக்கெட் காரணங்களினால் எடுக்கப்பட்ட முடிவு' என்று ஜமைக்கா அணி தெரிவித்துள்ளது. (ம)




## ரி20

# வரலாற்றில் முதல்முறையாக பட்டியலில் ஆஸி. முதலிடம்

சிட்னி, ம 3
ரி20 வரலாற்றில் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் இதுவரையில் இடம்பெறாத ஆஸ்திரேலிய அணி, தற்போது முதல் முறையாக முதலாம் இடத்தைப் பிடித்துள்ளது.
2018ஆம் ஆண்டுமுதல் முதலிடத்தில் இருந்துவந்த பாகிஸ்தான் அணி தற்போது நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. புதிய பட்டியலின்படி ஆஸ்திரேலியா முதலிடத்திலும், இங்கிலாந்து இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும், தென்னாபிரிக்கா ஐந்தாவது இடத்திலும் உள்ளன. (ம)



# சூத்திரதாரிகளை பிடிக்காவிடின் வீதிக்கு இறங்கியே போராட்டம்

## குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டோர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 3**

**கடந்த ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் பற்றி இதுவரை நீதி கிடைக்கவில்லை. குண்டுதாரிகள் பலியாகிவிட்டனர். அவர்களுக்கு பின்புலமாக இருந்தவர்கள் யார்? உதவியவர்கள் யார்? தாக்குதலை தடுக்கத் தவறியவர்கள் யார்?. அவர்களை நீதியின்முன் நிறுத்தியிருக்க வேண்டும். இனியும் நடவடிக்கை இல்லையேல் கத்தோலிக்க மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவர்.**

நீர்கொழும்பு மாவட்ட அருட்தந்தையர்களும், பயங்கரவாதத்தால் காயமடைந்தோரும் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதம் தொடர்பாக அரசுக்கு அறிவித்தல் ஒன்றை விடுப்பதற்காக நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தில் கட்டான, போலாவலான மற்றும் கொச்சிக்கடை ஆலய அருட்தந்தையர்கள் இணைந்து ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் மேற்கண்ட விடயத்தை அவர்கள் கூறினர்.

இதில் கருத்து வெளியிட்ட நீர்கொழும்பு புனித அன்னம்மாள் ஆலய பங்குத் தந்தை சிறில் காமினி பெர்னாந்து,

‘உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் எவருக்கும் சம்பவம் நடந்து ஒருவருடம் கடந்துள்ள நிலையிலும் நியாயம் கிடைக்கவில்லை. குண்டுவெடிப்புச் சம்பவத்தின் நோக்கம் என்ன? இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் தற்கொலைதாரிகள் உயிரிழந்து விட்டனர்.



அவர்களுக்குப் பின்புலமாகச் செயற்பட்டவர்கள் யார்? அவர்களுக்கு உதவிய முக்கிய புள்ளிகள் யார்? அவர்கள் அனைவரையும் கைது செய்து நீதியின் முன் நிறுத்தியிருக்க வேண்டும். ஒருவருடம் கடந்தும் எதுவும் நடக்கவில்லை.

அதேபோன்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்களை தாக்குதலுக்கு உதவியவர்களாகக் கருதி வெளிப்படுத்துவதுடன் அவர்களைத் தண்டிக்க வேண்டும். கொரோனா நோய் பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தணிந்ததும் கத்தோலிக்க மக்களுக்கும் உரிய நியாயம் வேண்டும்-என்றார்.

கட்டுவப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தை மஞ்சுள நிரோஷான் பெர்னாந்து தெரிவித்ததாவது:

‘பயங்கரவாதத் தாக்குதலில் கொச்சிக்கடை மற்றும் கட்டுவப்பிட்டிய ஆலயங்களில் 171 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். தாக்குதலில் காயமடைந்தோரில் 10 பேர் எந்தவித பணிகளையும் சுயமாகச் செய்யமுடியாமல் படுக்கையில் இருக்கின்றனர். இன்னமும் 50 பேர் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைபெற்று வருபவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் தாய் தந்தையை இழந்த குடும்பங்கள் 14 உள்ளன.

எம்மால் தீர்த்து வைக்க முடியாத பல பிரச்சினைகள் உள்ளன. அதனை அரசு தீர்த்து வைக்கமுடியும்- என்றார். (த)

---

# ஓ.எல். பரீட்சையில் 10,346 பேர் 9 ‘ஏ’

கொழும்பு, மே 3

2019 டிசெம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 5 லட்சத்து 56 ஆயிரத்து 256 மாணவர்களுள் 10 ஆயிரத்து 346 பேர் 9 பாடங்களிலும் ‘ஏ’ சித்தி பெற்றுள்ளனர்.

சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பாடசாலைகளிலிருந்து 4 லட்சத்து 33 ஆயிரத்து 189 மாணவர்களும், 2 லட்சத்து 84 ஆயிரத்து 57 பேர் தனிப்பட்ட ரீதியிலும் விண்ணப் பித்திருந்தனர்.

மொத்தமாக 7 லட்சத்து 17 ஆயிரத்து 246 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தாலும், 5 லட்சத்து 56 ஆயிரத்து 256 மாணவர்களுள் 10 ஆயிரத்து 346 பேரே பரீட்சைக்குத் தோற்றினர்.

இவர்களில் 73.84 சதவீத மாணவர்கள் உயர்தரம் செல்ல தகுதிபெற்றுள்ளனர்.

66.82 வீதமானோர் கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர் என்று கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-44)

---



# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 3

கோப்பாய் குப்பிழாவத்தையில் 45 லீற்றர் கசிப்பு மற்றும் 175 லீற்றர் கோடா என்பனவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்புக் காய்ச்சுவதற்குத் தயாராக வைத்திருந்த பாத்திரங்களையும் கைப்பற்றியுள்ளோம். அதே இடத்தைச் சேர்ந்தவரே கைதானார். அவர் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-20,111)

---

# மணல் அகழ்வு சாரதிகள் கைது

மட்டக்களப்பு, மே 3

ஊரடங்கு நடைமுறையிலிருந்த வேளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு உழவு இயந்திரங்களுடன் சாரதிகளும், கனரக வாகனத்துடன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மணல் அகழ்ந்துள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (ப-150)

---

# மரக்கறிகள், பழங்களை விற்க விசேட ஏற்பாடு

## விலை மாற்றமெனின் முறையிடுங்கள் கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வவுனியாவில் ஊரடங்கு காலத்தில் மரக்கறி மற்றும் பழச் செய்கைகளைச் சந்தைப்படுத்துவதற்கு விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் அதிகளவான மரக்கறிகள், பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஊரடங்கு காலத்தில் அவற்றை உற்பத்தியாளர்கள் விற்பனைசெய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது.

அதனால் தேவைக்கு அதிகமாகவுள்ள மரக்கறிகள், பழங்கள் மாவட்டச் செயலர் ஊடாகவும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாகவும், பிரதேச செயலரின் ஒத்துழைப்புடன் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன.

51 வியாபாரிகள் வெளிமாவட்டங்களுக்கு மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மூலமாக விவசாயிகள் தங்கள் மரக்கறிகள் மற்றும் பழங்களை வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச்செல்லமுடியும். யாரேனும் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்யாது தமது தொலைபேசியை நிறுத்தி வைத்திருந்தால் அவர்களுடைய ஊரடங்கு அனுமதிப்பத்திரத்தை நிறுத்து வதற்கு மாவட்டச் செயலருக்கு சிபாசு செய்யப்படும்.

பப்பாசிகளை விற்பதில் விலைப் பிரச்சினைகளை விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு மாவட்டச் செயலர் ஊடாக ‘ரெட்லேடி’ வகை பப்பாசிக்கு ஆகக்குறைந்த விலை 20 ரூபாவும், ‘டெனிம்’ வகைக்கு 27 ரூபாவுமாக விலைவரையறை செய்யப்பட்டுள்ளது. எனவே ஊரடங்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொண்டவர்கள் குறித்த விலைக்குக் குறைவாக பெற்றுக்கொண்டால் எமக்கு அறிவிக்கும் பட்சத்தில் அவர்களுடைய ஊரடங்கு அனுமதிப் பத்திரத்தையும் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது 09 நபர்களுக்கு பப்பாசிகளை வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலதிகமாக உள்ளூர் மரக்கறிகளை விற்பனை செய்வதற்கு 33 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதிக தொகையில் மரக்கறிகளை விற்பனை செய்வார்களேயானால் அவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை எமது துரித எண் 024 222 5511 ஊடாக தொடர்புகொண்டு தெரிவிக்க முடியும். முறையிட்டால், அவர்களின் ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்வதற்கு மாவட்டச் செயலர் ஊடாக உரிய நடவடிக்கை மேற்கொள்வோம் - என்றார். (த-110)

---

# பொலிஸ் அதிகாரி பதவி நீக்கம்

கொழும்பு, மே 3

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ் மாத்தறை பொலிஸ் அதிகாரி ஒருவர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் சில்வா மற்றும் உதவிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பலிஹக்கார ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்தே பொலிஸ் அதிகாரி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நடைமுறைக்குவரும் வகையில் குறித்த பொலிஸ் அதிகாரி பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

கொரோனா இடர் அவதான வலயமாகப் பெயரிடப்பட்டுள்ள நீர்கொழும்பு பகுதியில் உள்ள பெண்ணொருவரை மாத்தறைக்கு அழைத்து வந்து, அவரோடு கேகனதுரதலல்ல பகுதியிலுள்ள தமது நண்பரின் வீடொன்றில் தங்கியிருந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் தற்போது குறித்த பொலிஸ் அதிகாரியும் அந்தப் பெண்ணும் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப)



## வடமாகாணத்தின் 4 மாவட்டங்களில் இன்று அதிவெப்பம்

கொழும்பு, மே 3
மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் இன்று அதிகளவான வெப்பநிலை நிலவுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இத்தகைய பகுதிகளில் வாழும் மக்கள் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளைப் பின்பற்றி செயற்படுங்கள். தேவையான அளவு தண்ணீர் பருக வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.
கிழக்கு, வடமேல், வடமத்திய, மேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் இன்று அதிகளவான வெப்பநிலை பதிவாகக்கூடுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (து)

### இதயங்களால் இணைந்து

# முள்ளிவாய்க்காலை நினைவு கூருவோம்!

### அழைக்கிறது பிரிட்டன் தமிழர் பேரவை

**கொழும்பு, மே 3**
**கொரோனா வைரஸ் காரணமாக தனிநபர் பாதுகாப்பு வலியுறுத்தப்படுவதனால் வழமைபோன்று நாம் பொதுவெளியில் நினைவேந்தல் நிகழ்விற்காக ஒன்றுகூடுவது இந்தமுறை தவிர்க்கப்படுகின்றது. உலகெங்கும் எடுக்கப்படும் பாதுகாப்பு விதிமுறைகளை மதித்துவாழும் தமிழ் மக்கள் இந்த வருடம் உலகெங்கும் இதயங்களால் இணைந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவு கூருவோம்.**

இவ்வாறு பிரிட்டன் தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உலகத்தின் பார்வையிலிருந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை மறக்கவோ, மறுக்கவோ முடியாது.
தற்போது உலகெங்கும் மனித குலத்தை அச்சுறுத்தி வரும் கொரோனா பேரழிவின் விழிம்பில் நிற்கும் இந்த வேளையில் ஒட்டு மொத்த மானுடத்தின் உயிர் வாழ்வு, எதிர்காலம் குறித்த எமது அக்கறையையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு எமது அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு தமது உயிரைத் துச்சமாக மதித்து முன்னரங்கில் நின்று செயற்படும் அனைவரின் தியாகத்துக்கும் தலைவணங்குகின்றோம்.
மானுடத்தைப் பாதிக்கும் இந்தச் சூழலில் 11 வருடங்களுக்கு முன்னர் இன அழிப்பின் உச்சத்தைத் தொட்ட முள்ளிவாய்க்கால் படுகொலைகளை உலகத்தின் மத்தியில் மறந்து விடலாகாது.
ஈவிரக்கமற்ற சிங்களப் பேரினவாதிகளால் மனித விழுமியங்கள், சர்வதேச சட்டங்கள் எதனையும் கருத்திற் கொள்ளாது அப்பாவித் தமிழ் மக்கள் மீது தீயை உமிழ்ந்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை உலகத்தின் கண்முன் நினைவூட்டப்பட வேண்டியதும், நீதிகோரப்பட வேண்டியதுமான தொன்று.
ஓர் இனத்தைக் கொல்வது அல்லது அங்கங்களைச் சிதைப்பது மட்டும் இனப்படுகொலை அல்ல, அந்த இனத்தை தாம் வாழும் இடங்களில் வாழ முடியாத சூழலை உருவாக்குவதும் உள, உடல் ரீதியாகப் பாதிப்புகளை உருவாக்குவதும் இனப்படுகொலையே.
தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை ஆதாரபூர்வமாக உலகின் முன்கொண்டுவந்து நிறுத்த வேண்டும்.
குறிப்பாக இந்த 11 வருடங்களாக சர்வதேச நாடுகளுக்கு ஊடாக இனப்படுகொலைக்கு நீதிவேண்டி சர்வதேச தளத்தில் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நீதிகோரி முன்னெடுக்கப்பட்ட விடயங்களை அரசும் புதிய ஜனாதிபதியும் முற்றுமுழுதாக புறம் தள்ளி வெளியேறி விட்டனர்.
ஆயினும் சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ளாத இவர்களின் வெளியேற்றத்தால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை நாங்கள் மேலும் பலப்படுத்தி சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டு எங்கள் மக்களுக்கான பாதுகாப்பும் பரிகார நீதியும் கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும். என்றுள்ளது. (ஒ,5)

## 40 போத்தல் கசிப்புடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னார், மே 3
மன்னாரில் 40 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மன்னார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்த்தனன் தெரிவித்தார்.
இலந்த மோட்டைக் கிராமத்தில் அவர் கைது செய்யப்பட்டார்.
தமக்குக் கிடைத்த தகவலின்படி நேற்று முன்தினம் அதிகாலை ஐந்து மணியளவில் அவர் கைதுசெய்யப்பட்டார். கசிப்பை போத்தல்களில் நிரப்பும்போது அவர் கைது செய்யப்பட்டார் என்றும் 34 வயதுடைய அவர், கட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-213)

## ஊரடங்கு காலத்தில் விசேட சுற்றிவளைப்பு

கொழும்பு,மே 3
ஊரடங்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக இன்றும், நாளையும் விசேட சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.
கசிப்பு தயாரிப்பு மற்றும் அதனை விநியோகித்தலில் ஈடுபடுவோர்கள் குறித்து அதிக அவதானம் செலுத்தப்படும்.
கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அன்று தொடக்கம் இதுவரையான காலப்பகுதி வரை 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# ராணுவ முகாம் பகுதியில் கழிவுகள் வீசப்படுகின்றன

### கொரோனா சந்தேகத்திலுள்ளோரின் கழிவுகளா என்று ஊரவர்கள் அச்சம்

கிளிநொச்சி, மே 3
கொரோனா சந்தேகநபர்கள் தனிமைப்படுத்தலில் உள்ள கிளாலி விடத்தற்பளை இராணுவ முகாமிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்திலுள்ள சிறிய காட்டுப்பகுதியில் கழிவு உணவுகள் மற்றும் சில கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டுள்ளன என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி – யாழ்ப்பாண மாவட்டத்தின் இணைப்புப் பகுதியில் இது காணப்படுகின்றது.
அங்கு காணப்படும் மிகச் சிறிய பள்ளம் ஒன்றில் தண்ணீர் காணப்படுகின்றது. அதற்குள் கழிவுதண்ணீர் விடப்பட்டிருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக கிலாலி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா நோயாளர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பலர் குறித்த முகா மில் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.
குறித்த இடத்தில் கொட்டப்பட்ட கழிவுகள், முகாமில் உள்ளவர்கள் உட்கொண்ட உணவுகளின் மிகுதியாகவும் இருக்கலாம்.
கழிவு நீரும் அப்படியிருக்கலாம். இந்தக் கழிவுகளை எமது பிரதேசத்தி லுள்ள கால்நடைகள் உண்கின்றன, நாய்கள், பறவைகள் உண்கின்றன. இதன்பின்னர் இவை எமது பிரதேசத்துக்கு, வீடுகளுக்கு வருகின்றன. அவற்றின் மூலமாக நோய்த் தாக்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.
அந்தக் கழிவுகளை எரித்தோ அல்லது கிடங்கு வெட்டிப் புதைத்திருந்தாலோ இந்த நிலை வந்திருக்காது. உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
“இந்த விடயம் தொடர்பாக மக்கள் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். நேரடியாகச்சென்று பார்வையிட்டோம். இவை தொடர்பாக உரியவர்களுடன் கலந்துரையாடி தீர்வு வழங்கப்படும். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவாறு நடவடிக்கை பாதுக்கப்படும்.” என்று சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் மயூரன் தெரிவித்தார். (து-6)



# நெடுங்கேணியில் காற்றுடன் மழை

நெடுங்கேணி, மே 3
முல்லைத்தீவு நெடுங்கேணியில் நேற்றுமுன்தினம் காற்றுடன் கனமழை பெய்தது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் வான் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.
நெடுங்கேணி ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் நீண்டகாலமாக வறட்சி நிலவிய நிலையில், நேற்றுமுன்தினம் காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.
இதனால் வான் பயிர்களும் விவசாயப் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. கீரிசுட்டான் கிராமத்தில் பெரிய மரம் புரண்டு வீழ்ந்ததில், வீட்டின் ஒரு பகுதி உடைந்து சேதமடைந்து மின்சாரமும் தடைப்பட்டது.
அதேநேரம் வாழை, முருங்கை போன்ற வான் பயிர்களும் முறிந்து சேதமடைந்துள்ளன. பலா உள்ளிட்ட பயிர்களும் புகையிலை, கத்தரி, பயிற்றை போன்ற உப உணவுப் பயிர்களும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-70)

# வெசாக் பொருள்கள் வீடுகளுக்கே வரும்

### அரசு அறிவிப்பு

கொழும்பு, மே 3
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பௌத்த மக்களுக்குத் தேவையான வெசாக் உற்சவ பொருள்களை அவர்களின் வீடுகளுக்கு கொண்டு சென்று விநியோ கிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அரசு தெரிவித்துள்ளது.
சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைவாக நடமாடும் சேவையின் ஊடாக மேற்படி பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக புத்த சாசன அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்ர தெரிவித்துள்ளார்.
நாட்டில் காணப்படும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இம்முறை வெசாக் வலயங்கள் அமைத்தல், தான சாலைகள் அமைத்தல் மற்றும் வெசாக் தோரணங்களை காட்சிப்படுத்தல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ப)

# வெசாக் வலயங்கள், தான சாலைகள் அமைப்பதையும் தவிர்க்க வேண்டும்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

**கொழும்பு, மே 3**
**நாட்டில் காணப்படும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இம்முறை வெசாக் வலயங்கள் அமைத்தல், தானசாலைகள் அமைத்தல் மற்றும் வெசாக் தோரணங்களை காட்சிப்படுத்தல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் அமைச்சு மேலும் தெரிவித்ததாவது;
நாட்டில்காணப்படும்கொரோனா வைரஸ் அச்சசுறுத்தல் காரணமாக இம்முறை வெசாக் உற்சவத்தை வேறு முறைமையில் கொண்டாட வேண்டியிருக்கிறது. அதற்கான ஆலோசனைக் கோவை சுகாதார அமைச்சினால் அனைத்து பௌத்த மதத் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. வெசாக் வலயங்கள், தானசாலைகள், வெசாக் தோரணங்கள் காட்சிப்படுத்தல் உள்ளிட்ட மக்கள் ஒன்று கூடக் கூடிய வாறான நிகழ்வுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். அத்தோடு வெசாக் தினத்தில் தேவையற்ற முறையில் வீடுகளிலிருந்து வெளிச் செல்வதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்றது.
சுகாதார அமைச்சின் செயலாளர் பத்ரானி தெரிவித்துள்ளமைக்கமைய, விகாரைகளில் சமூக இடைவெளியைப் பேண முடியாதவாறு மக்களை ஒன்றிணைத்து பூசை வழிபாடுகளை நடத்துவதை தவிர்த்துக் கொள்ளவும். இவற்றை மக்களை வீடுகளிலிலேயே பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும், அத்தோடு வெசாக் கூடுகளை வீடுகளில் தொங்க விடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ப)

# ஆசியர் பற்றாக்குறையிலும் மன். மாணவர்கள் முன்னிலை

மன்னாரில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்ற போதும், 2019 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுச் தராதர சாதாரண பரீட்சையில் மன்னார் மாவட்டம் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் முன்னேற்றம் கண்டுள்ளது என்று மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் கே.ஜெ.பிறட்லி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பரீட்சை முடிவுகளின் படி மன்னார் மாவட்டம் 2018 இல் ஒன்பதாம் இடத்திலிருந்து, 2019 இல் ஏழாம் இடத்துக்கு தேசிய மட்டத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது. அதேவேளை வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களில் மன்னார் கல்வி வலயமானது 2019 இல் முதலாம் இடத்தில் உள்ளது.
2018 இல் கல்வி பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 5 பாடங்களுக்கு மேல் ஆயிரத்து 631 மாணவர்கள் தோற்றியிருந்தனர். ஆயிரத்து 227 மாணவர்கள் கல்வி தராதர உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றிருந்தனர். அதாவது 75.23 வீதமானோவராவார்.
பரீட்சையில் 6 பாடங்களுக்கு மேல் தோற்றியவர்களில் 8 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதி ருந்தனர். அதாவது 0.49 வீதமானோர் ஆவார். ஆனால் 2019 இல் பரீட்சையில் மன்னார் மாவட்டம் தேசிய மட்டத்தில் ஒன்பதாம் இடத்திலிருந்து, தற்போது ஏழாம் இடத்துக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்த ஆண்டு ஆயிரத்து 607 மாணவர்கள் 5 பாடங்களுக்கு மேல் தோற்றியிருந்தனர். இவர்களில் ஆயிரத்து 200 மாணவர்கள் கல்வி பொதுத் தராதர உயர்தர வகுப்பில் தோற்றத் தகுதி பெற்றுள்ளனர். அதாவது இது 74.67 வீதமானதாகும். ஆனால் ஆறு பாடங்களுக்கு மேல் தோற்றி அனைத்துப் பாடங்களிலும் 20 மாணவர்கள், அதாவது 1.24 வீதமான மாணவர்கள் சித்தியடைய தவறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
வட மாகாணத்தைப் பொறுத்தமட்டில் 12 கல்வி வலயங்களில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் கல்வி வலயமானது 2019 இல் ஆயிரத்து 207 மாணவர்கள் தோற்றி 931 மாணவர்கள் கல்வி பொது தராதர உயர்தர வகுப்பில் கற்கத் தகுதி பெற்றுள்ளனர். 13 மாணவர்கள் மட்டுமே அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.
அந்த வகையில் மன்னார் கல்வி வலயமானது வட மாகாணத்தில் முதலாம் இடத்தை பிடித்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மன்னார் கல்வி வலயத்தில் அழகியல், கணிதம் மற்றும் விஞ்ஞானம் பாடங்களுக்கான ஆசிரியர்கள் உட்பட 25 வீதமான ஆசிரியர்கள் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருகின்ற போதும், தேசிய மட்டத்திலும் முன்னேற்றம் கண்டுள்ளதுடன், வட மாகாணத்தில் முதல் இடத்தை அடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. எமது திணைக்களப் பாடநெறிகளுக்கான உதவி கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் வழிகாட்டல் மற்றும் ஆசிரியர்கள் பற்றாக்குறைகள் நிலவி வருகின்ற போதும் அதிபர்கள், ஆசிரியர்களின் அயராத முயற்சியின் காரணமாகவே மன்னார் கல்வி வலயத்தின் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.
அனைத்துப் பாடங்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை நீங்குமானால் எமது வலய மாணவர்கள் மேலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கும். என்றார். (க-60)

# சீவல் தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துக

### கிளி, முல்லை. மாவட்டங்களை சேர்ந்தவர்கள் கோரிக்க

கிளிநொச்சி, மே 3
சீவல் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள நாம் கொரோனா காலத்தில் முழுமையாக பாதிக்கப் பட்டுள்ளோம். எங்களுடைய வாழ்வாதாரத்தை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சீவல் தொழிலை மேற்கொள்ளும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் சீவல் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டு பல்வேறு குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது நாட்டில் நிலவும் கொவிட்19 தொற்று நோய் காரணமாக நாடு பூராகவும் மதுபான சாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. இதனால் கள்ளு விற்பனை நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. இதனால் சீவல் தொழிலை வாழ்வாதாரத் தொழிலாக மேற்க்கொள்ளும் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நாங்கள் அரச சட்டத்துக்கும், மதுவரித் திணைக்களத்தின் சட்டத்துக்கும் உட்பட்டு இந்தச் சீவல் தொழிலை மேற்க்கொண்டு வருகின்றோம். இந்தத் தொழிலில் இருந்து பெறப்படுகின்ற உற்பத்திப் பொருள்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதது. ஆனால் அதிக செறிவு கூடிய சாராயங்களுடன் ஒப்பிட்டு இதனையும் விற்பனை செய்ய முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக அரச விடுமுறை நாள்களில் நாமும் விற்பனை செய்யக்கூடாது என கடைகள் மூடப்படு கின்றது. சாராயத் தொழில் என்பது ஒரு தனிநபருடைய மூலதனத் தொழிலாகும் இந்தத் தொழிலானது பல குடும்பங்க ளின் வாழ்வாதாரத் தொழில். இதனை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். எமது உற்பத்திகள் எமது மக்களுக்கு தேக ஆரோக்கியம் மற்றும் மருத்துவ தேவைக்களுக்கான மென்பானம் ஆகும். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்றுக் காரணமாக எமது விற்பனை நிலையங்கள் அனைத்தும் மாதக் கணக்கில் மூடப்பட்டுள்ளன. இதனால் அங்கத்தவர்களான நாமும் எமது குடும்பங்களும், ஊழியர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம் இதனை கருத்தில் எடுத்து உரியவர்கள் மாற்று ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் - என்றனர். (ப-6)



# பாடசாலைகள் ஆரம்பித்தால் விஷேட நேர அட்டவணை

*ஆராய்கின்றது அமைச்சு*

கொழும்பு, மே 3

கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப் படுத்தியதன் பின்னர், பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதாயின், விஷேட நேர அட்டவணை முறைமை அவசியம் என்று தெரிவித்த கல்வி அமைச்சு, இது பற்றி கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தது.

இதன்படி, பரீட்சைகளை அடிப்படையா கக்கொண்டு 10 ஆம் தரத்துக்கு மேலுள்ள தரங்களுக்காக மாத்திரம் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர் பில் அவதானம் செலுத்தப்படுகின்றது என்று கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார். கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் சிலருடன் நேற்றுமுன்தினம் நடை பெற்ற சந்திப்பில் இது குறித்துக் கலந் துரையாடப்பட்டுள்ளது.

இதேநேரம், பாடசாலைகளையும் மீள ஆரம்பிப்பதற்கு முன்னதாக, அனைத் துப் பாடசாலைகளிலும் தொற்றுநீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளு மாறு, மாகாணக் கல்விப் பணிப்பாளர் களுக்கு கல்வி அமைச்சு வழிகாட்டல் கோவை ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை, பாடசாலைகளை மீள ஆரம்பித்த பின்னர் கல்வி அமைச்சு வெளியிடும் சுகாதார பாதுகாப்பு முறை மைகளுக்கு அமைய, பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு தாம் தயார் என்று அனைத்து இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைச் சங் கம் தெரிவித்துள்ளது. (த)

# ஊரடங்கில் மாணிக்கக்கல் அகழ்ந்தனரென எழுவர் கைது

கொழும்பு, மே 3



ஊரடங்குவேளை யில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ் வில் ஈடுபட்டனரென்ற குற்றச்சாட்டில் ஏழு பேரை பொகவந்தலாவ பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவ பெற்றோசோ மற்றும் செல் வகந்த ஆகிய தோட்டங்களைச் சேர்ந்தவர் களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்த மாணிக்கக்கல் அகழ்வுக் காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தல், ஊரடங்கு ஆகிய சட்டங் களை மீறயமை, சட்டவிரோதமாக மாணிக் கக்கல் அகழ்வில் ஈடுபட்டமை என இவர்க ளுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி ஹற்றன் நீதிமன்றம் முன்னிலையில் முன்னிலைப்ப டுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (த-44)

# அரசமைப்புச் சிக்கல்களுக்கு உயர்நீதிமன்றிலேதான் தீர்வு!

## கோத்தா ஜனநாயகத்தை மதிப்பவரானால் இதைச் செய்யட்டும் என்கிறார் முன்னாள் எம்.பி.



**கொழும்பு, மே 3**

**சடலங்களுக்கு மத்தியில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிக்க வேண்டாம். ஜனநாயகத்தைப் போற்றும் தலைவர் என்றால் அரசமைப்பில் காணப்படும் சிக்கல் தொடர்பில் உயர்நீதிமன்றிடம் ஆலோசனைபெற்று அதற்கமைய செயற்படுங்கள்.**

இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரியுள் ளார், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினரான ஹர்ஷன ராஜகருணா.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தொழிலாளர்கள் நலன் தொடர்பில் நாம் சிந்திப்போமானால், தொழிலாளர் களுக்கு அவர்களின் தொழில் பாது காக்கப்படுகின்றமையே பெரும் நலன். கொரோனா வைரஸ் பரவலால் 30 வீதமானவர்களுக்கு தொழில் இல்லா மல் போகும் வாய்ப்புள்ளது என்று பல நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஏனைய நாடு கள் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளன. ஆனால் இலங்கை அரசு எத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது? தொழில் இல்லாமல் போகும் வாய்ப்பிருப்பவர்க ளுக்கு முறையான சலுகையைப் பெற் றுக் கொடுப்பதற்கு இப்போதிருந்தே ஆயத்தமாக வேண்டும். தற்போது வழங்கப்படும் 5ஆயிரம் ரூபா போன் றில்லாது முறையான சலுகையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

### ஒரு நாளைக்கு ரூ.125 போதுமா?

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு 40 நாள்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் அந்த 5ஆயிரம் ரூபா முழு மையாகக் கையளிக்கப்படவில்லை. இந்த 5ஆயிரம் ரூபா 40 நாள்கள் வரை ஒரு குடும்பத்தின் செலவுக்கு போதுமானதாக அமையாது. 40 நாள் களுக்கு 5ஆயிரம் ரூபா என்றால் ஒரு நாளுக்கு 125 ரூபாவாகவே வகுக்கப் பட்டுள்ளது. 125 ரூபா நாள் ஒன்றுக்கு ஒரு குடும்பத்துக்கு போதுமானதா?

### நாடாளுமன்றை கூட்டவேண்டும்

நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் நாடாளுமன்றை உடனே கூட்டவேண்டும். நாடாளுமன் றைக் கூட்டுவதால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம், கொடுப் பனவு என்பன வழங்க வேண்டும் என்ற அவசியமில்லை. நாட்டின் ஜன நாயகத்தை நிலைநாட்டுவதே மிக முக்கியம். அரசின் செயற்பாட்டால் நாட்டுக்கு நிவாரணம் வழங்க வேண் டும் என்று எண்ணியிருப்பவர்கள் அத னைப் பெற்றுக் கொடுக்காமலே விட்டு விடுவார்கள்.

51 நாள்கள் அரசியல் நெருக்கடியின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஜனநாயகத்தை மீறி செயற்பட்டதனால் சர்வதேசத்தின் மத்தியில் எமது நாட்டுக்குத் தலைக்க னிவு ஏற்பட்டது. இந்த நிலைமையை மீண்டும் தோற்றுவிக்க வேண்டாம். இதேவேளை, கொரோனா வைரஸு டன் அரசமைப்புத் திருத்தத்தையும் தொடர்புபடுத்தி குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்காதீர்கள்.

கொரோனா பரவலால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் தேர்தலை நடத்துவது பெரும் பாதிப்பு களை தோற்றுவிக்கும் என்று உலக நாடுகளும் எச்சரித்துள்ளன. இந்தநி லையில் நாங்கள் ஏதாவது கருத்துத் தெரிவித்தால் அரசின் செயற்பாடு களை அரசியலாக்க முயற்சிக்கின் றோம் என்று ஜனாதிபதி தெரிவிக் கின்றார்.

கொரோனா பரவல் ஏற்பட்டுள்ள தரு ணத்திலும் சுகாதார அமைச்சர் மார்ச் 19 ஆகும்போது வைரஸைக் கட்டுப்ப டுத்தலாம் என்று தெரிவித்திருந்தார். இவையனைத்தும் தேர்தலை நடத்து வதற்கான ஏற்பாடுகளே.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டும் தேர்தலுக்கு நாடு தயாராக உள்ளது என்பதை எடுத்துக் காட்ட ஊரடங்கைத் தளர்த்தினார்கள். அதனால் மேலும் பிரச்சினை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நாங்களா கொரோனா அச் சுறுத்தல் மத்தியில் அரசியல் செயற்பா டுகளை முன்னெடுக்க முயற்சிக்கி றோம்?.

நாடாளுமன்றைக் கூட்டாது செயற்பட வது அரசமைப்புக்கு முரணானது என்று நாங்கள் தெரிவித்து வருகின்ற போதிலும் அரசு அவ்வாறு எந்த பிரச் சினையும் இல்லை என்று நிராகரித்து வருகின்றது. இவ்வாறான சூழ்நிலை யில் ஜனநாயகத்தை மதிக்கும் தலை வராக இருந்தால் ஜனாதிபதி என்ன செய்ய வேண்டும். உயர் நீதிமன்றை நாடி அதன் ஆலோசனைக்கமைய செயற்பட வேண்டும்- என்றார். (த)

# அரச, தனியார் துறையினர் ஒன்றிணைதல் வேண்டும்

*கரு ஜெயசூரிய தெரிவிக்கின்றார்*

கொழும்பு, மே 3

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காரணமாக உலகளா விய ரீதியில் பெருமளவானோர் தமது தொழில்களை இழந்திருக் கும் நிலையில், இந்தச் சவா லுக்கு முகங்கொடுக்க அரச, தனியார் துறை மற்றும் தொழி லாளர்கள் ஒன்றிணைய வேண் டியது அவசியம் என்று சபாநாய கர் கரு ஜெயசூரிய அறைகூவல் விடுத்திருக்கிறார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பி டப்பட்டுள் ளதாவது:

'இந்தமுறை கொண்டாடப்படும் சர்வதேச தொழிலாளர் தினம் மிக முக்கியமானது. கொவிட் 19



கொரோனா வைரஸ் பரவல் கார ணமாக பெருமளவானோர் தொழில் வாய்ப்பை இழந்துள்ள னர். மேலும் பலர் தொழிலை இழக்கும் அபாய நிலை ஏற்பட் டுள்ளது.

இந்தச் சவாலை எதிர்கொள்வ தற்கு அரசதுறை, தனியார்துறை மற்றும் தொழிலாளர்கள் அனை வரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது. என்றுள்ளது. (த)

# கடற்படையினரில் எவரும் கவலைக்கிடமாக இல்லை!

*பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு*

கொழும்பு, மே 3

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான கடற்படைச் சிப்பாய்களில் எவருமே கவலைக் கிடமான நிலையில் இல்லை. அவசர சிகிச் சைப் பிரிவில்கூட ஒருவரேனும் சிகிச்சைபெற வில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட மருத்துவர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவிய அனைத்து கடற் படையினரும் அடையாளம் காணப்பட்டுள்ள னர். கடற்படையினர் சென்ற அனைத்து இடங்களும் இனங்காணப்பட்டுள்ளன. இதன்மூலம் கொத்தணி பரவல் தடுக்கப் பட்டுள்ளது.

கடற்படையினர் தொடர்பை ஏற்படுத்திய நபர் களிடம் பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப் பட்டுவருகின்றன, சிலர் தனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். -என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-44)

# உற்பத்தியாளர்களைக் கவனிக்க மக்களின் வயிற்றிலடித்த அரசு!

**கொழும்பு, மே 3**

**உள்நாட்டு பால்மா நிறுவனங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலேயே உள்நாட்டு பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலத்துறை அமைச்சர் சமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.**



தேசிய பால்மா உற்பத்தியாளர்களுக்குப் போதுமான பால் இல்லையென்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

குறித்த விலை அதிகரிப்பின் மூலம் தேசிய பால் உற்பத்தி நிறுவனங்களின் ஊடாக பால் உற்பத்தியாளர்களுக்கு சரியான விலையொன்றைப்பெற்றுத்தர முடிந்துள்ளதாகத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அதற்கான வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் அச்சிடப்படவில்லை என்று அரச அச்சகத்தின் பிரதானி கங்கானி லியகசே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுகர்வோர் அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ள விலை அதிகரிப்புக்கான அனுமதிக்கு அமைவாக 345 ரூபாவாக இருந்த 400 கிராம் நிறையுடைய உள்நாட்டு பால்மா பொதியொன்றின் விலை 380 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 860 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் நிறையுடைய பால்மா பொதியொன்றின் விலை 945 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மில்கோ நிறுவனத்தின் தலைவர் லசந்த விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக நாடு முடங்கியுள்ளது. தனியார் தொழிலாளிகள் வேலையின்றி முடங்கி யுள்ளனர். மக்களின் வருமானம் குறைந்துள்ளது. உணவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நிலையில், உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் பால் மா பைக்கற்றுக்களைக்கூட அரசு விலை அதிகரித்துள்ளது. இது பொதுமக்களின் வயிற்றிலடிக்கும் செயற்பாடு அன்றி வேறு எப்படிக் கூறுவது என்று பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். (சு)

# கொரோனா நோய் ஒழிப்பு ராணுவ நடவடிக்கையா?

வவுனியா, மே 3

கொரோனா தொற்று நோயை அழிப்பதை வெறுமனே ஓர் இராணுவ நடவடிக்கை போன்று பார்க்காமல் அரசு அந்தந்த மாவட்டம் மற்றும் மாகாணங்களில் உள்ள மருத்துவ நிபுணர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்வதே உகந்ததாக இருக்கும். இவ்வாறு தெரிவித்துள்ளார், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் பல பாகங்களிலும் கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளானவர்களை அல்லது அந்த நோய்த்தொற்றுள்ளவர்களுடன் தொடர்புடையவர்களைக் கண்காணிப்பதற்காக தனிமைப்படுத்தல் முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இராணுவ முகாம்களும் கடற்படை முகாம்களும் விமானத் தளங்களும் தனிமைப்படுத்தல் முகாம்களாக மாற்றியமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான முகாம்களில் மிகப்பெருமளவில் கொரோனா வைரஸ் தாக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் பல நூற்றுக்கணக்கான வர்கள் தென்பகுதியிலிருந்து அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கையை வந்தடைந்த பிரயாணிகளுக்கும் தொற்றுக்கள் உள்ளனவா என்பதை அவதானிப்பதற்காக இங்கே கொண்டுவரப்பட்டனர்.

இந்த நிலையங்களை வடக்கிலோ கிழக்கிலோ ஏனைய மாகாணங்களிலோ அமைக்கும்போது படையினர் எடுத்த முடிவா? துறைசார் மருத்துவ நிபுணர்கள் எடுத்த முடிவா? என்ற கேள்வி எழுகின்றது.

தென் பகுதியிலிருந்து கொரோனா வைரஸ்ஸுடன் தொடர்புடைய எத்தனைபேர் வடபகுதிக்கு கொண்டு வரப்படுகின்றார்கள்? எந்தெந்த முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றார்கள்?, இவர்களின் சுகாதாரப் பராமரிப்புக்கள் யாரால் மேற்கொள்ளப்படுகின்றன? என்ற எந்தவொரு விடயமும் வடக்கு மாகாண ஆளுநருக்கோ, மாவட்டச் செயலருக்கோ, வடக்கு மாகாண சுகாதார, பணிப்பாளருக்கோ தெரியாத நிலை தான் இருக்கின்றது.

அரசு மாவட்டம் விட்டு மாவட்டம் அல்லது நீண்ட தூரங்களிலிருந்து கொரோனா நோய்த்தொற்று உள்ளவர்களாக சந்தேகிக்கின்றவர்களை அழைத்துவந்து வேறு மாவட்ட முகாம்களில் தங்கவைத்திருப்பது சரியான செயற்பாடா என்ற கேள்வி எழுகின்றது.

பாடசாலைகளையும் கல்விக் கூடங்களையும் தனிமைப்படுத்தும் நிலையங்களாக மாற்றுவதற்கு பொலிஸார் ஊடாகவும் இராணுவத்தினர் ஊடாகவும் நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் நாங்கள் பாடசாலைகளையோ கல்விக் கூடங்களையோ கையகப்படுத்த மாட்டோம் என்று அறிக்கை விடுவது மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவே உள்ளது- என்றுள்ளது. (சு-110)



# சேமக்காலையில் கல்லறைகள் விசமிகளால் சேதமாக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நவாலி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைக்குச் சொந்தமான இடுகாட்டில் சில கல்லறைகள் விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

அங்கு சென்ற மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்தார். மானிப்பாய் பொலிஸார் விசாரணைமேற்கொண்டுள்ளனர். (சு-20,111)

# சிகை அலங்கார நிலையங்கள் வைத்திருக்கும் 500 பேர் பாதிப்பு

வவுனியா, மே 3

சிகையலங்கார நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையால் 500 வரையிலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா அழகக கூட்டுறவுச் சங்க பொருளாளர் அ.கிருபைராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

செட்டிகுளம் தொடக்கம் ஓமந்தை வரையில் உள்ள அழகக நிலையங்களை உள்ளடக்கிவவுனியா மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்துள்ளோம்.

கொரோனா தாக்கம் காரணமாக எமது தொழில் செய்யும் 500 வரையிலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்கள் நாளாந்தம் இந்தத் தொழிலை நம்பியே வாழ்ந்து வந்தார்கள். ஒன்றரை மாதங்களாக சுகாதார அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக நிலையங்களை மூடியுள்ளோம்.

எமது பாதுகாப்பு மட்டுமல்ல சமூக பாதுகாப்பையும் கருத்திற்கொண்டே நாம் மூடியிருக்கின்றோம். இதனால் எமது சங்க உறுப்பினர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேறு தொழில் செய்ய முடியாதவர்களாக உள்ளனர்.

எனவே அரசு பாதுகாப்பான சுகாதார வழிமுறைகளை ஏற்படுத்தி எமது நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். அல்லது எமது தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் - என்று தெரிவித்தார். (சு-18)

# கிளிநொச்சி இளைஞர்கள் வீடு திரும்ப அனுமதியுங்கள்

கிளிநொச்சி, மே 3

தொழில் நிமித்தம் கொழும்புக்குச் சென்று ஊரடங்கு காரணமாக திரும்ப முடியாத நிலையிலுள்ள கிளிநொச்சி இளைஞர்களை விரைவாக சொந்த மாவட்டத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கோரியுள்ளார்.

குறித்த இளைஞர்களை விரைவாக கிளிநொச்சி அனுப்பி வைக்க உதவுமாறும், அதுவரைக்கும் அவர்களுக்குத் தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்குமாறும் கோரியுள்ளார். (சு-214)

# பீ.சீ.ஆர். பரிசோதனைகளை நாளாந்தம் 3,000ஆக்கலாம்

## பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கிறார்

தேவையேற்படின் நாளொன்றுக்கு நடத்தப்படும் பீ.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை 3ஆயிரமாக அதிகரிக்க முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அமைப்பு தினமும் நடத்தும் சோதனைகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது பயன்பாட்டிலுள்ள கருவிகள் மற்றும் சீனாவிலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட கருவிகளின் துல்லியத்தன்மை மற்றும் அதனால் கிடைக்கும் சோதனை முடிவுகள் சரியாக இருக்கின்றன.

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழி சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளை பொது மக்கள் பின்பற்றுவதே என்றும் அவர் அறிவுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் மாத்திரம் ஆயிரத்து 397 பீ.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும், பரிசோதனைகளுடன் ஒப்பிடுகையில் வைரஸ் தொற்று எண்ணிக்கை சிறிது அதிகரித்துள்ளது.

மேல் மாகாணத்தில் பெருமளவானோருக்கு பீ.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் இன்னும் 100 வீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதென்று எங்களால் கூற முடியாதுள்ளது. என்று மேலும் தெரிவித்தார். (சு)

# தொழிலாளர்களுக்கான சலுகைகள் கொடுங்கள்

## அரசிடம் கோருகிறார் ஹரின் பெர்னான்டோ

**கொழும்பு, மே 3**

**கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் தொழிலாளர்களுக்கு நடைமுறை சாத்தியமான சலுகைகளை பெற்றுக் கொடுக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் ஹரின் பெர்னான்டோ இந்த நாட்டுக்கு கிடைக்கப் பெறும் நிதியை உரியமுறையில் செலவிடுவதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்றும், இதன்போது எந்த நிபந்தனையும் இன்றி, ஊதியமும் பெறாமல் மக்களின் நலனுக்காக செயலாற்றுவதற்கு அனைத்து எதிர்க்கட்சியும் தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 90 இலட்சத்துக்கு அதிகமான தொழிலாளர்கள் இந்நாட்டில் இருக்கின்றனர். இவர்கள் தொடர்பில் அரசாங்கம் எவ்வகையான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இவர்களுள் 71 வீதமானோர் கம்பனிகள் மற்றும் தொழிற்சாலைகளில் கடமை புரிகின்றனர். இவர்களுக்கான நலன்களை கம்பனி மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்களே நிறைவேற்றி வருகின்றனர். உரிமையாளர்களுக்கு உரிய வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டாலே, அது தொழிலாளர்களை போய்ச் சேரும். கொரோனா தொற்றால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் இந்த உரிமையாளர்களுக்கான கடன் வசதிகள் மற்றும் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளதா?. இந்த நிலையில் அரசாங்கம் கடன் வசதிகளை வழங்கியுள்ளது என்று அறிவித்து வருகின்றது. ஆனால் இந்த கடன்களை பெறுவதற்காக வங்கிகளுக்குச் சென்றால் பல ஆவணங்களைத் தேடுவதே பெரும் சிக்கலை தோற்றுவித்துள்ளது. ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றை பெற்றுக் கொள்வது என்பது எவ்வாறான கடினம் என்பதை அனைவரும் அறிவீர்கள்.

கொரேனா வைரஸ் பரவல் தொடர்பில் உலகளாவிய ரீதியில் நெருக்கடி ஏற்பட்டிருந்த போதும், வெளிநாட்டிலிருந்து வருபவர்களை தடுப்பதற்காக எவ்வாறான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தான் அரசியல் அறிவுமிக்க ஒருவர் ஜனாதிபதியாக தெரிவுச் செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் அன்று தெரிவித்தோம். நாட்டின் ஆட்சியை ஜனாதிபதி மாத்திரமின்றி நாடாளுமன்றமும் ஒத்துழைத்தே செயற்படுத்த வேண்டும். இவ்வாறு நெருக்கடியான நிலைமையில் ஜனாதிபதி மாத்திரம் செயற்படுவது என்பது சிக்கலை ஏற்படுத்தும். அதனாலேயே இன்று பல அனுபவமிக்க தலைவர்கள் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். ஏன் ஜனாதிபதிக்கும், பிரமருக்கும் மாத்திரம் இதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியவில்லை. நாட்டுக்கு பெருந்தொகையான நிதி கிடைக்கப் பெற்றால் அதனை செலவிடுவதற்கான முறையொன்று உள்ளது.

சுகாதார அமைச்சரும், இராணுவத் தளபதியும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று தெரிவித்து வந்தார்கள் ஆனால் தற்போது நிலைமை மாறியுள்ளது. இதனால் நாம் கொரோனாவுடன் இணைந்து வாழப் பழகிக் கொள்வோம் என்ற கருத்தை பரப்ப முயற்சிக்கின்றனர். கொரோனாவிடம் இணைந்து வாழ்வோம். நபர்களுக்கிடையிலான இடைவெளியை பேணிக் கொண்டு எமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்போம். ஆனால், அதைத் தேர்தலை அடிப்படையாக கொண்டு மாத்திரம் செயற்படுத்த முன்வரவேண்டாம். நாட்டை பெரும் நெருக்கடி நிலைக்கும் தள்ள வேண்டாம். தயவு செய்து தாமரை மொட்டை அமங்கல மொட்டாக அர்த்தப்படுத்த முனைய வேண்டாம்-என்றார். (ப)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் தொடர்பில் வேலைத்திட்டம் தேவை

*முன்னாள் அமைச்சர் ரிசாத் வேண்டுகோள்*



கொழும்பு, மே 3

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் கொரோனா வைரஸ் தாக்கத்தின் பின்னர் எதிர்நோக்கும் கஷ்டங்கள் தொடர்பில், சரியான வேலைத் திட்டமொன்றை இலங்கை அரசு முன்னெடுப்பதோடு, துன்பத்தில் வாழும் பணியாளர்களுக்கு விமோசனம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனஅகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது அங்கு வாழும் பலர் தொழில்களை இழந்துள்ளனர். இன்னும் ஒரு பகுதியினர் சம்பளம் கிடைக்காது கஷ்டத்தில் வாழ்கின்றனர். தங்குவதற்குக் கூடச் சரியான இடமின்றித் தவிக்கின்றனர். அன்றாட உணவுக்கே பிரச்சினையான நிலை பலருக்கு ஏற்பட்டுள்ளது இந்த நிலையில் இலங்கையில் வாழும் தமது குடும்பங்கள் பற்றி அவர்கள் கவலை கொண்டுள்ளனர். சரியான தொடர்பாடல் வசதிகள் கிடைக்காமையால், குடும்ப உறவுகள் தொடர்பில் அறிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல நாடுகளின் தூதுவராலயங்கள் மூடப்பட்டுக் கிடப்பதால் அவற்றுடன் தொடர்பு கொண்டு, தமது பிரச்சினைகளைக் கூறுவதற்கு முடியாதுள்ளது. இலங்கை அரசு இவர்களின் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இந்த நாட்டுக்குப் பெருமளவு அந்நியச் செலாவணியை உழைத்துத் தருபவர்கள் வெளிநாட்டுப் பணியாளர்கள் என மார்தட்டும் நாம், இவர்களின் விடயத்தில் அக்கறை காட்டுவதே தார்மீகக் கடமையாகும் - என்றார். (ப)

# ஆடை, ஆபரணங்களாலும் கொரோனா பரவ வாய்ப்பு

அரச ஊழியர்கள் கடமை நேரத்தில் அணிய வேண்டிய ஆடைகள் தொடர்பில் விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆடைகள் மற்றும் ஆபரணங்கள்மூலமாகவும்கொரோனா வைரஸ் தொற்று பரவக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

டை, ஓசிசாறி, சாறி, மாலைகள், மோதிரங்கள் உள்ளிட்ட ஆடைகள் ஆபரணங்கள் என்பவற்றை அணிந்து வர வேண்டாம்எனவும் நாகரிகமானமுறையில்சாதாரணஆடைகளைஅணிந்து கடமைக்கு சமூகமளிக்க முடியும் என சுதேச விவகார, உள்ளூராட்சி மன்ற, மாகாணசபைகள் அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் அரச நிறுவனங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் போது பணியாளர்கள் எவ்வாறான அணுகுமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பது குறித்து சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள், தாய்ப்பாலூட்டும் பெண்கள் தொடர்பில் மிகவும் இலகுவான நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் மே மாத இறுதி வரையில் அவர்களை பணிக்கு அழைக்காதிருக்க முடிந்தளவு முயற்சிக்குமாறும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏதேனும் காரணத்துக்காக இவ்வாறானவர்களை அழைக்க நேரிட்டால் அவர்களது வீட்டுக்கு மிக அருகாமையில் உள்ள காரியாலயமொன்றில் அவர்களை பணிக்கு அமர்த்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் குறித்த பெண் உத்தியோகத்தர்கள் எழுத்துமூல கோரிக்கை முன்வைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களுக்குள் பிரவேசிக்க முன்னதாக அனைத்து ஊழியர்களும் கைகளைச் சுத்தமாகக் கழுவிக் கொள்ள வேண்டும் எனவும் அலுவலகத்துக்கு வரும் பொதுமக்களுக்கும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனவும் முகக் கவசங்கள் அணியப்பட வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)



# இந்தியாவில் இமாலயமாகும் கொரோனாப் பாதிப்புக்கள்

**புதுடெல்லி, மே 3**

**இந்தியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் 2,500 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை சுமார் 38 ஆயிரமாக அதிகரித்துள்ளது.**

கொரோனாவுக்கு எதிராக இந்தியா கடும் நடவடிக் கைகளை எடுத்து வருகின்ற போதிலும் மும்பை புறநகர்ப் பகுதிகள், சேரிப் புறங்கள் என்பவற்றி லும் கொரோனாவின் தாக்கம் அதிகமாகியுள்ள தால் சீனா அளவுக்கு இந்தியாவிலும் கொரோனா தாக்கம் செலுத்தும் என்று அச்சம் வெளியிடப்பட் டது. அதற்கேற்ப ஒவ்வொரு நாளும் அங்கு பாதிக் கப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிக ரித்து வருகின்றது. நேற்றுமுன்தினம் மட்டும் 2,500 பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,225 பேர் உயிரிழந்துள்ளனர். (ம)





## மிக ஆபத்தான பகுதியாக அறிவிக்கப்பட்டது காஷ்மீர்

புதுடெல்லி, மே 3

இந்தியாவின் காஷ்மீர் மாநி லம் கொரோனா வைரஸ் பரவு வதற்கு ஏற்ற சிவப்பு மண்டலப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா பரவுவதற்கு ஏது நிலை உள்ள பகுதியாக காஷ் மீர் உள்ளது. இதனால் அங்கு மக்கள் நடமாட்டத்தைக் கட்டுக் குள் கொண்டு வருவதற்காக வும், கொரோனா பரவலைத் தடுப்பதற்காகவும் காஷ்மீர் அபாய வலய மாநிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஏழைகளுக்கு உணவிடுவதற்காக 15,000,000 செலவிட்ட விவசாயி!

ஏழை மக்களுக்கு உணவு வழங்குவ தற்காக இந்தியாவில் விவசாயியொ ருவர் சுமார் ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவைச் செலவிட்டுள்ளார்.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தி லேயே இந்தச் சம்பவம் பதிவாகியுள் ளது. நிவாஸ் மந்தா என்ற அந்த விவ சாயியிடம் இந்திய ஊடகங்கள் இது தொடர்பில் வினவியுள்ளன. இதற்கு அவர் தெரிவித்ததாவது:

ஊரடங்கு நடைமுறைக்கு வந்தசில நாட்களில், பலர் பணமின்றிப் பசியால் வாடுவதாக கேள்விப்பட்டேன். அவர்க ளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என நினைத்தேன். இதுகுறித்து என் தந் தையிடம் பேசினேன். இந்த இக்கட் டான தருணத்தில் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு நாம் உதவ வேண்டும் என்றார். பின்னர் என் தந்தை தான் சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கொடுத்தார். எனக்கு அது ஊக்கமாக இருந்ததால் என்னிடம் இருந்த பணத்தையும் சேர்த்து ஒரு கோடியே 50 லட்சம் ரூபா வுக்கு உணவு தானியங்களை வாங்கி னோம். பின்னர் உணவு தேவைப்படு வோரை இனங்கண்டு வழங்கினோம் என்றார். (ம)



## பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்







கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட இந்திராபுரம் மற்றும் வேம்போடுகேணி கிராமங்களில் கொரோனா எதிர்ப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர்உணவுப்பொதிகள்வழங்கப்பட்டன. (ம-222)





புலம்பெயர்ந்து வசிக்கும் சமூக ஆர்வலர் ஒரு வரின் நிதி உதவியில் வவுனியா மடுக்கந்த, மற்றும் ஓமந்தை கிராமத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங் கப்பட்டுள்ளன. (ம-110)





மட்டக்களப்பு வாசம் உதவும் கரங்கள் அமைப் பால் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாங்கேணி மற்றும் பால்சேனை போன்ற கிரா மங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலை யில் வாழும் குடும்பங்களுக்கு ஒருதொகுதி உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ம)





லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நிதி யின் உதவியில், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவ தற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக் கப்பட்டுள்ள செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கங்கன்குளம் கிராமத்தில் வாழும் குழந்தைகளுக்கு பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேற் லிமிட்டெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.05.2020இல் வெளியிடப்பெற்றது.